ஹுஸீர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களது சொற்பொழிவுகளின் முக்கியத்துவம், அருள்கள் மற்றும் லஜ்னா இமாயில்லாஹ் –வின் பொறுப்புகள் பக்கம் 3

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) தொடர்–10 பக்கம் 9

பராஹீனே அஹ்மதிய்யா (தொடர்–10) பக்கம் 13

யு.கே. வாக்கிஃபாத்தே–நவ் தேசிய இஜ்திமா 2025 நிறைவுரை பக்கம் 19


மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil


Nubuwwat Vazhi | July 2026 | Vol. 5 - Issue No. 8



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311


TEHRIK-E-WAQF-E-NAU

**“வக்ஃபே நவ் -வைச் சேர்ந்த ஒருவருக்கு இறைவன் வழங்கியுள்ள அந்தஸ்து உலகச் செல்வங்களை விட மிகவும் மேலானது.”**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்)



# திருக்குர்ஆன்

قُلْ أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ ۖ فَإِن تَوَلَّوْا فَإِنَّمَا عَلَيْهِ مَا حُمِّلَ وَعَلَيْكُم مَّا حُمِّلْتُمْ ۖ

அல்லாஹ்வுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள் என்று நீர் கூறுவீராக. எனவே நீங்கள் புறக்கணித்து விட்டால் அ(த் தூது)வரிடம் ஒப்படைக்கப்பட்டதற்கே அவர் பொறுப்பாளராவார். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டதற்கு நீங்கள் பொறுப்பாளர்களாவீர்கள். (24:55)



# ஹதீஸ்

عَنْ أَبِي نَجِيحٍ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: "وَعَظَنَا رَسُولُ اللَّهِ صلى الله عليه و سلم مَوْعِظَةً وَجِلَتْ مِنْهَا الْقُلُوبُ، وَذَرَفَتْ مِنْهَا الْعُيُونُ، فَقُلْنَا: يَا رَسُولَ اللَّهِ! كَأَنَّهَا مَوْعِظَةُ مُوَدِّعٍ فَأَوْصِنَا، قَالَ: أُوصِيكُمْ بِتَقْوَى اللَّهِ، وَالسَّمْعِ وَالطَّاعَةِ وَإِنْ تَأَمَّرَ عَلَيْكُمْ عَبْدٌ، فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا، فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ، عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ؛ فَإِنَّ كُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ". [رَوَاهُ أَبُو دَاوُدَ]،

ஹஸ்ரத் அபுநஜீஹ் அல் இர்பாத் இப்னு ஸாரியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அதன் காரணமாக எங்கள் உள்ளங்கள் அச்சத்தால் நிரம்பி கண்களில் கண்ணீர் வந்தது. எனவே நாங்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது விடைபெறும் சொற்பொழிவு போன்று உள்ளது. எனவே எங்களுக்கு அறிவுரை கூறுங்கள் என்று நாங்கள் கேட்டோம். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறையச்சத்தை மேற்கொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுரை கூறுகின்றேன். உங்களின் அமீருக்கு செவியேற்று கட்டுப்படுங்கள். உங்களில் எவர் நீண்ட நாள் வாழ்வாரோ அவர் பெரும் குழப்பத்தைக் காண்பார். எனவே நீங்கள் என்னுடைய சுன்னத்தையும் குலஃபாயே ராஷிதாவின் (நேர்வழி பெற்ற கலீஃபாக்களின்) சுன்னத்தையும் கடைவாய்ப் பற்களைக் கொண்டு பற்றிக் கொள்வதைப் போன்று பேணிக் கொள்ளுங்கள். மார்க்கத்தில் பித்அத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். (அபூதாவூது ஹதீஸ் எண் 28)

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களது சொற்பொழிவுகளின் முக்கியத்துவம், அருள்கள் மற்றும் லஜ்னா இமாயில்லாஹ்வின் பொறுப்புகள்

❖❖❖ ஜனாபா டாக்டர் மன்ஸூரா அலாவுத்தீன் சாஹிபா (சதர் லஜ்னா இமாயில்லாஹ் பாரத்) ❖❖❖

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

அல்லாஹ் தனது அன்பான மறை நூலாகிய திருக்குர்ஆனில் நம்பிக்கை கொண்டவர்களுக்காகத் தோன்றும் இறைதூதர்களை பேரருளாகக் குறிப்பிட்டவாறு, இவ்வாறு கூறுகிறான்:

لَقَدْ مَنَّ اللّٰهُ عَلَى الْمُؤْمِنِيْنَ اِذْ بَعَثَ فِيْهِمْ رَسُوْلًا مِّنْ اَنْفُسِهِمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ
وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۚ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு, அவர்களிடையே அவர்களிலிருந்து ஒரு தூதரை அனுப்பி நிச்சயமாக அருள் புரிந்துள்ளான். அவர் அவர்களுக்கு அவனது வசனங்களை ஓதிக் காட்டுகிறார். மேலும் அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார். மேலும் அவர்களுக்கு மறைநூலையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார். நிச்சயமாக அவர்கள் (இதற்கு) முன்னர் மிகத் தெளிவான வழிகேட்டில் இருந்தனர். (3:165).

மேலும் அல்லாஹ் திருக்குர்ஆனில் தன் தூதரின் கட்டளைகள் தொடர்பாக அறிவுரை கூறியவாறு இவ்வாறு கூறுகிறான்:

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَجِيْبُوْا لِلّٰهِ وَلِلرَّسُوْلِ اِذَا دَعَاكُمْ لِمَا يُحْيِيْكُمْ ۚ

நம்பிக்கை கொண்டவர்களே! (அல்லாஹ்வின் தூதராகிய) அவர் உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக உங்களை அழைத்தால் நீங்கள், அல்லாஹ்வுக்கும், தூதருக்கும் விடையளியுங்கள். (8:25).

அல்லாஹ் மனிதனின் வாழ்வைக் காப்பாற்றுவதற்காகவும், அதை வளர்ப்பதற்காகவும் வானத்திலிருந்து இரண்டு வகையான தண்ணீரை இறக்கி இருக்கிறான். அவற்றில் ஒன்று, மேகங்களிலிருந்து மழையாகப் பொழியும் பௌதிகமான தண்ணீர். அது பூமியின் தண்ணீருடன் சேர்ந்து மனித குலத்தை நிலைநாட்டுவதற்கான பயனை வழங்குகிறது. எனவேதான் அது வாழ்வின் தண்ணீர் என்று அழைக்கப்படுகிறது. மனிதனின் மார்க்க, ஆன்மிக வாழ்வுகளை நிலைநிறுத்துவதற்காக ஒரு வாழ்வுக்கான தண்ணீர் நபிமார்கள், இறைதூதர்கள் என்ற வகையில் வானங்களிலிருந்து இறங்குகின்றது. மேலும் அந்த மகத்தான பேரருளைப் பற்றிய குறிப்பையே சூரா ஆல இம்ரானின் இந்த (165-ஆவது) வசனத்தில் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். அதை நான் எனது சொற்பொழிவின் தொடக்கத்தில் ஓதியிருந்தேன். அதில், அல்லாஹ்வின் தூதர் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தனது வசனங்களை ஓதுகின்றார்; அவர்களைத் தூய்மைப்படுத்துகின்றார்; அவர்களுக்கு நெறிநூலையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார் என்று அல்லாஹ் கூறுகிறான்.




இக்காலத்தில் அனைத்துலகங்களின் இறைவன் தனது நேசத்திற்குரிய நபி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் ஆன்மிக பலனை தொடர்ந்தவாறு அனைத்துலகங்களின் அருட்கொடையின் ஆன்மிக மகனாகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக இப்போது மறுமை வரை இந்த ஆன்மிகத் தண்ணீருக்கான ஏற்பாட்டை செய்திருக்கிறான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“எவர் எனது கையிலிருந்து எனக்கு வழங்கப்பட்ட பானத்தை அருந்துவாரோ அவர் ஒருபோதும் மரணிக்க மாட்டார்.” (ருஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 104)

அந்த ஆன்மிக கூற்றுகளின், ஞானங்களின் விஷயங்கள் எனும் பலனை முஹம்மதிய்ய உம்மத்தில் நீண்ட காலம் வரை நீட்டிப்பதற்காக நம்பிக்கை கொண்ட, நல்ல செயல்களை செய்கின்ற அந்த மக்களிடம் கிலா:பத்தின் தொடரை தொடர்ந்து ஏற்படுத்துகிறான். நமது இந்தக் காலத்திலும் அல்லாஹ் இஸ்லாம் மார்க்கத்தை உயிரூட்டுவதற்காகவும், இஸ்லாமிய ஷரீஅத்தை நிலைநாட்டுவதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தனது இரண்டாவது வல்லமையை வெளிப்படுத்தியவாறு கிலா:பத் தொடரை நிலைநாட்டினான்.

ஆன்மிக தண்ணீரிலிருந்து அருளைப் பெற்று நம்பிக்கை கொண்டவர்களுக்கு கிடைத்த முன்னேற்றங்களைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: “வானவர்களிடமிருந்து பலனைப் பெறுவதற்கான ஒரு வழிமுறை, அல்லாஹ்வால் நிலைநாட்டப்பட்ட கிலா:பத்துடன் கலப்பற்ற தொடர்பு

வைக்க வேண்டும் மேலும் அவருக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதுமாகும்....... உங்களுக்கு இறைவனிடமிருந்து ஒரு புதிய உள்ளங்கள் கிடைக்கும். அவற்றில் மன அமைதி இறங்கும். மேலும் இறைவனின் மலக்குகள் அந்த உள்ளங்களை தூக்கிக் கொண்டிருப்பார்கள்...... தொடர்பை உருவாக்குவதன் விளைவாக உங்களிடத்தில் ஒரு மகத்தான மாற்றம் ஏற்படும் உங்களின் தைரியங்கள் உயந்தவையாகி விடும் உங்களின் ஈமானும், உறுதித்தன்மையும் அதிகமாகி விடும். வானவர்கள் உங்களுக்கு ஆதரவளிப்பதற்காக நிற்பார்கள். மேலும் உங்களின் உள்ளங்களில் உறுதியாக நிலைநிற்கும் தன்மையையும் தியாகத்தின் ஆன்மாவையும் ஊதுவார்கள். எனவே உண்மையான கலீஃபாக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வது என்பது வானவர்களுடன் தொடர்பை உருவாக்கி விடுகிறது. மேலும் மனிதனை இறை ஒளிகளுடன் பிணைக்கப்பட்டவராக ஆக்கி விடுகிறது.”
(கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத் தொகுதி 3 பக்கம் 392)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் ஒரு மகத்தான குறிக்கோள், முழு உலகையும் ஒற்றுமை எனும் சரடில் கோர்க்க வேண்டும் என்பதாகும். நமது ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் எவ்வளவு மகத்தான பேரருள் இருக்கிறது! அவன் நம்மை நமது அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இணைத்து விட்டான். அதன் விளைவாக எல்லா உலகத்திலுள்ள அஹ்மதிகளும்




ஒரே கையில் ஒன்று சேர்ந்திருக்கின்றோம். உலகளாவிய அளவில் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு அவசியமாக இருக்கும் அந்த முறைகளையும் அல்லாஹ் வழி வகுத்துத் தந்திருக்கிறான். இந்த புதிய வழிமுறையில் M.T.A-வுக்கு தனிச் சிறப்பான முக்கியத்துவம் இருக்கிறது. அல்லாஹ்வின் அருளால் M.T.A ஜமாஅத்தை காலத்தின் கலீஃபாவுடன் எல்லா நேரமும் பிணைத்து வைக்கிறது. காலத்தின் கலீஃபா அவர்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் ஜமாஅத் தனது முகத்தை அந்தப் பகுதியின் பக்கம் திருப்பி விடுகிறது. ஹாலந்தின் ஆண்டு மாநாடாக இருந்தால் முழு உலகமும் காலத்தின் கலீஃபா அவர்களின் அறிவுரைகளைக் கேட்பதற்காக ஹாலந்து மாநாட்டில் கலந்து விடுகிறது. ஃபிரான்ஸின் மாநாடாக இருந்தால், அதிலும் உலகிலுள்ள எல்லா அஹ்மதிகளும் M.T.A மூலமாக கலந்து கொண்டு விடுகின்றனர். பள்ளிவாயில்களின் திறப்பு விழாவாக இருந்தால் அல்லது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஈடுபாடுகள் M.T.A-ல் ஒளிபரப்பாகிறது என்றால், உலகிலுள்ள எல்லா அஹ்மதிகளும், தத்தமது இடத்தில் அமர்ந்தவாறு M.T.A-க்கு முன்னால் உட்கார்ந்து செயல் அளவில் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாண்டு பிரித்தானிய ஆண்டு மாநாட்டு நிகழ்வில் சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குறிப்பாக அந்த மாநாட்டின் ஒரு தனிச் சிறப்பான அடையாளமாகக் குறிப்பிட்டிருந்தது என்னவெனில், அந்த மாநாட்டை M.T.A உலகின் 56 நாடுகளில் 119 தலைமையகத்துடன் இணைத்திருந்தது - அல்ஹம்து லில்லாஹ். ஒற்றுமையின் இந்தக் காட்சிகளுக்கு உலகின் எந்தவொரு சமுதாயத்தின் அல்லது மார்க்கத்தின் அல்லது சமூகத்தின் முன்மாதிரியும் கிடைக்க முடியுமா? ஒருபோதும் முடியாது. இந்தக் காட்சிகளால் உள்ளம் அல்லாஹ்வைப் புகழ்வதால் நிரம்பி விடுகிறது. அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்துக்கு எத்தகைய அன்பிற்குரிய ஜமாஅத்தை வழங்கி இருக்கிறான் என்று உள்ளத்திலிருந்து துஆ எழுகிறது. அதன் சிந்தனைகளின் மைய சுழற்சி காலத்தின் கலீஃபா ஆவார். ஜமாஅத் இவ்வுலகில் இருந்தவாறு தத்தமது உலகை தனக்குரியதாக்கி வைத்திருக்கிறது. அந்த ஜமாஅத் தனது இமாமை எந்த அளவுக்கு நேசிக்கிறது என்றால், அவர்களுடைய ஒவ்வொரு சொல்லையும் செவிமடுத்துக் கேட்பதற்கு எல்லா நேரமும் ஆயத்தமாக இருக்கிறது. எனவே கலீஃபா அவர்களின் கிலாஃபத்துடன் உள்ள தொடர்பில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக M.T.A-ன் அருளால் தொடர்ந்து பயனடைந்து கொண்டிருக்கிறது. நாம் எந்த அளவுக்கு கிலாஃபத்துடன் அன்புடனும், கொள்கைப் பிடிப்புடனும், கலப்பற்ற தன்மையுடனும், நன்றியுணர்வுடனும் முன்னேற்றமடைவோமோ அதே அளவுக்கு கிலாஃபத்தின் அருள்கள், பலன்களிலிருந்து பங்கு பெறுவோம் என்பதையும் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கிலாஃபத்துக்குக் கட்டுப்படுவது என்ற கருத்தை தொழுகையை நிலைநாட்டுவது என்பதுடன் இணைத்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

“அல்லாஹ் இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக கிலாஃபத் எனும் இந்த அருட்கொடையின் தொடரை தொடங்கி இருக்கிறான். இதிலிருந்து பயனைப் பெறுவதற்கு ஒவ்வோர் அஹ்மதியும் தனது வாக்குறுதி கிலாஃபத்தின் பயனை தொடர வைப்பதற்காக அல்லது கிலாஃபத்திலிருந்து பயனைப் பெறுவதற்காக முழுமையாக கட்டுப்பட்டுபவர்களைச் சேர்ந்தவர்களுக்கு அல்லாஹ்வுடைய (கிலாஃபத் பற்றிய) இந்த வாக்குறுதி இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வை வணங்குவதை எப்போதும் முன் நிறுத்துங்கள். ஏனெனில் அல்லாஹ்வை எப்போதும் நினைவில் வைப்பவர்கள்தான் முழுமையாக கட்டுப்படுபவர்கள்

ஆவார்கள். ‘தொழுகைகளை நிலைநாட்டுங்கள்’ என்று அல்லாஹ் நமக்கு மீண்டும் மீண்டும் கட்டளை இட்டிருக்கின்றான். எனவே தொழுகைகளை நிலைநாட்டுவது மிகவும் முக்கியமானது ஆகும். அதற்காக தன்னை கிலா∴பத்துடன் தொடர்புள்ளவராகக் கருகின்றவர், தொடர்பு வைக்க விரும்புகின்றவர், இதிலிருந்து பயனைப் பெற விரும்புகின்றவர் நாம் தொழுகைகளை நிலைநாட்டுவதன் பக்கம் முழுமையாக கவனம் செலுத்த வேண்டும் என்பதை அவர் முன்னிறுத்த வேண்டும்.”

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொழுகைகளை நிலைநாட்டுவது பற்றி விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் மிகவும் அருமையான முறையில் இவ்வாறு கூறியிருக்கிறார்கள்:

“தொழுகையின் மிகச் சிறந்த பகுதி ஜுமுஆ குத்பா ஆகும். அதில் இமாம் குத்பா கொடுக்கின்றார்கள். மேலும் அறிவுரைகளைக் கூறுகிறார்கள். மேலும் காலத்தின் கலீபா அவர்கள் உலகின் நிலைமைகளைப் பார்த்தவாறு, உலகின் பல்வேறு சமுதாயங்களுக்கு அவ்வப்போது எழுகின்ற, தோன்றுகின்ற தேவைகளை முன்னிறுத்தியவாறு அறிவுரைகளைக் கூறுகிறார். அதன் மூலமாக சமுதாய ஒற்றுமையும், ஒருமைப்பாடும் உருவாகிறது.” (த∴ப்ஸீரே கபீரிலிருந்து எடுக்கப்பட்டது. தொகுதி 8 பக்கம் 575).

காலத்தின் கலீ∴பா எல்லாவற்றின் திசையை ஒரே பக்கம் வைக்கின்றார். அதன் அசல் படத்தை இன்று நாம் பார்க்கின்றோம். எனவே இன்றோ, அல்லாஹ் M.T.A மூலமாக காலத்தின் கலீ∴பா அவர்களின் குத்பா உலகின் எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும், எல்லா நகரங்களிலும், எல்லா கிராமங்களிலும் கேட்கவும், பார்க்கவும்படுகின்ற அத்தகைய கட்டமைப்பை உருவாக்கி விட்டான். கலீ∴பா கூறும் விஷயங்கள் முன்னால் அமர்ந்திருப்பவர்களுக்காக மட்டும் இருப்பதில்லை. மாறாக, நீங்கள் கூறுகின்ற விஷயங்கள் எங்களுடைய நிலைக்கேற்ப இருக்கின்றன. நாங்கள் இதைக் கேட்டு எங்களுக்கு எங்களை சீர்திருத்திக் கொள்ளும் கவனம் உருவாகிறது என்றும், உண்மையிலேயே கிலா∴பத்தின் அமைப்பு எத்தகைய அமைப்பு என்றால், அது நம் அனைவரையும் ஒற்றுமையில் கோர்த்து விட்டது என்ற உணர்வு ஏற்படுகிறது என்றும் ஆப்பிரிக்கா, துருக்கி, ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து பல கடிதங்கள் தமக்கு வருகின்றன என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொடந்து கூறுகின்றார்கள்: “எனவே கூறப்படும் விஷயங்கள் பாகிஸ்தானிலுள்ள சிந்தனை உள்ளவர்களுக்காகக் கூறப்படுகிறது அல்லது ஐரோப்பாவிலுள்ளவர்களுக்காகக் கூறப்படுகிறது என்ற எண்ணம் தவறானதாகும். அவ்வாறு அல்ல. மாறாக, உலகின் ஒவ்வொரு மூலையிலும், ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பழக்கங்கள் ஓரளவுக்கு ஒன்றுபட்டவையாக இருக்கின்றன என்று கடிதங்களின் மூலமாக எனக்குத் தெரிய வருகிறது. அதன் காரணமாக மக்களுக்கு அவர்களை சீர்திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்து விடுகிறது. இன்றைய காலத்தில் நான் இஸ்லாமிய வரலாற்றைப் பற்றிய விஷயங்களைக் கூறிக் கொண்டிருகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை பற்றிய விஷயங்களைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறேன் என்றால் அதிலும் நமக்கு அறிவுரையாக இருக்கும் பல விஷயங்கள் வந்து விடுகின்றன. மேலும் மக்கள் இதிலிருந்து பெரிய பயனை அடைந்து விடுகின்றனர்.......

எனவே அல்லாஹ் நம்மிடம் உருவாக்கிய இவற்றிற்கான ஒரே வழி இந்த கிலா∴பத்தான். இதன் மூலமாக ஜமாஅத்தில் ஓர் ஒறுமைப்பாடு உருவாகி விட்டது. மேலும் 215 நாடுகளில் வாழும் ஒவ்வோர் அஹ்மதியும் ஒன்றாக மாறி இந்த அமைப்புடன் இணைந்திருக்கிறார். மேலும் தன்னை சீர்திருத்துவதற்கு முயற்சி செய்கிறார்.” (ஜுமுஆ குத்பா 30.05.2025)



இங்கு மிகவும் முக்கியமான ஒரு நுண்ணிய கருத்தின் பக்கமும் உங்களுக்கு கவனமூட்டுவதை முக்கியமானதாகக் கருதுகிறேன். அதாவது அல்லாஹ் மறு உலகின் மகத்துவ மிக்க அருட்கொடையாக சுவர்க்கத்தைக் குறிப்பிட்டிருக்கிறான். மேலும் அந்த சுவர்க்கத்தின் உலக வடிவம் என்பது ‘கிலா∴பத் அமைப்பு’ என்று குறிப்பிட்டுகிறான். மேலும் இரண்டையும் பெறுவதற்கான ஒன்றுபட்ட வழிமுறையாக நல்ல செயல்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பான பொருத்தமாகும். இதன்படி, அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

وَبَشِّرِ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ اَنَّ لَهُمْ جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ؕ

பொருள்: மேலும் நம்பிக்கை கொண்டு நற்செயல் செய்கின்றவர்களுக்காகத் தோட்டங்கள் உள்ளன. அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும் என்ற நற்செய்தியை நீர் (அவர்களுக்குக்) கூறுவீராக. (2:26).

கிலா∴பத் பற்றிய வசனத்திலும் இதையே குறிப்பிட்டிருக்கிறான். அதில் இவ்வாறு கூறுகிறான்:

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ

பொருள்: மேலும் அல்லாஹ் உங்களில் நம்பிக்கை கொண்டு நற்செயல் ஆற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீ∴பாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீ∴பாவாக ஆக்குவதாக வாக்குறுதி அளிக்கின்றான். (24:56).

(2:26 & 24:56 ஆகிய) இந்த இரண்டு இடங்களிலும் ஈமான் என்பதுடன் நற்செயல்கள் என்பதும் மிகப் பெரிய நிபந்தனையாக வந்துள்ளது. மேலும் செயல்கள் எப்போது நற்செயல்களாக மாறுகின்றன என்பதைப் பற்றி இப்போது நாம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் மேற்கோளில்

பார்த்தோம். அதாவது காலத்தின் கலீஃபா அனைவரின் திசையை ஒரு பக்கமே வைக்கின்றார். (அதாவது அனைவருக்கும் நன்மையையே விரும்புகிறார்). அதாவது எந்த நேரத்தில் எந்த வேலையைச் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது; எதிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று கலீஃபா கூறுகிறார். இன்னும் கூறுவதென்றால், காலத்தின் கலீஃபா அவர்கள் எந்தச் செயலை நற்செயல் என்று குறிப்பிடுகிறாரோ அதுதான் நற்செயல் ஆகும். அதற்கு எதிரான செயல் ஒருபோதும் நற்செயலாக இருக்க முடியாது.

எடுத்துக்காட்டாக, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“நீங்கள் அனைவரும் இமாமின் சைகையின்படி நடங்கள். அவரது கட்டளையிலிருந்து அணுவளவும் இங்கும் அங்கும் செல்லாதீர்கள். அவர் கட்டளையிடும்போது முன்னால் செல்லுங்கள். அவர் எதன் பக்கம் முன் செல்வதற்குக் கட்டளையிடுகிறாரோ முன் செல்லுங்கள். எங்கிருந்து விலகுவதற்குக் கட்டளையிடுகிறாரோ அங்கிருந்து விலகி விடுங்கள்.” (அன்வாருல் உலூம் தொகுதி 14 பக்கம் 515-516)

கண்ணியத்துக்குரிய கலீஃபாக்களின் வழிகாட்டல் -களுக்கு, அறிவுரைகளுக்கு செவி கொடுப்பதும் அதன்படி செயல்படுவதும் எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை நாம் அறிவோம். ஆனால் அந்தக் கட்டளைகளை கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நாவினாலேயே நேரடியாகக் கேட்பது எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததும், தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதும் ஆகும்! இது தொடர்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“காலத்தின் கலீஃபா அவர்கள் சார்பாக எந்த விஷயத்தை இன்னொருவர் சென்றடைய வைக்கின்றாரோ அதற்கு காலத்தின் கலீஃபாவிடமிருந்து நேரடியாக ஒரு விஷயத்தைக் கேட்பதற்கு இருக்கும் அந்தத் தாக்கம் ஏற்படுவதில்லை என்பது எனது அனுபவமாகும். எனது வாழ்க்கையின் நீண்ட காலம் மற்ற கலீஃபாக்களின் கீழ் அவர்களின் வழிகாட்டாலுக்கு ஏற்ப நடப்பதற்கான முயற்சியில் செலவாகி இருக்கின்றது. மேலும் இந்த குத்பாவில் கலீஃபா அவர்கள் இந்த விஷயத்தைக் கூறியிருந்தார்கள் என்று ஒருவர் ஏதாவது தூதை எடுத்துக் கூறுவது மற்றும் குத்பாவில் தானே அமர்ந்து அந்த விஷயத்தைக் கேட்பது ஆகிய இந்த இரண்டிற்கும் வானத்திற்கும், பூமிக்குமான வித்தியாசம் இருக்கிறது.” (ஜுமுஆ பேருரை 08.01.1993)

எனவே காலத்தின் கலீஃபாவின் கட்டளைகள் நம்பிக்கை கொண்டவர்களுக்கு உயிராக இருக்கின்றன. மேலும் அவற்றைக் கேட்பதும், அவற்றின்படி செயல்படுவதும் அவருடைய வாழ்வாக இருக்கிறது. (கலீஃபா ஆகிய) அவர் மூலமாகவே நம்பிக்கை கொண்டவர் ஆகிய) அவருக்கு நிரந்தரமான வாழ்வு கிடைக்கிறது. எனவேதான் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய மக்களாகிய நமக்கு நான்கு அம்ச செயல்திட்டத்தை வழங்கியுள்ளார்கள். அதில் ஒன்று, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நேரடி ஜுமுஆ பேருரையை நாமும் கேட்க வேண்டும் நம் குழந்தைகளிடமும் அதைக் கேட்பதற்கான பழக்கத்தை உருவாக்க வேண்டும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாமுக்கு ஏற்ப அல்லாஹ் வானத்திலிருந்து இறக்கும் பால் ஆகும். இந்த ஜுமுஆ குத்பா ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நம்பிக்கை கொண்டவர்களின் வீடுகள் வரை சென்றடைகின்றன - அல்ஹம்து லில்லாஹ்.

இது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “.....எனது குத்பாக்களையும், பல்வேறு நிகழ்ச்சிகளையும் கண்டிப்பாகக் கேளுங்கள். சில பொறுப்பாளர்கள் கூட எனது குத்பாக்களை முறையாகக் கேட்பதில்லை என்று நான் ஆய்வு செய்திருக்கிறேன்..... உலகில் எல்லா இடங்களிலும் அஹ்மதிய்யத்தின் போதனை பற்றி உலகிற்கு தெரியும் வகையில் உங்களை நீங்களே இவற்றுடன் கண்டிப்பாக இணையுங்கள்.” (குத்பா ஜுமுஆ 27.10.2013)

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது ஜுமுஆ பேருரையிலும், சொற்பொழிவு -களிலும் முபல்லிக்மார்கள், முஅல்லிம்கள், ஜமாஅத் பொறுப்பாளர்கள் ஆகியோர் மீண்டும் மீண்டும் ஜமாஅத்திற்கு நினைவூட்டிக் கொண்டிருக்குமாறு இவ்வாறு அறிவுரை கூறினார்கள்:

“சில முரப்பிகள் (கொள்கை பரப்புநர்கள்), மிகவும் உயரிய வகையில் இந்த வேலையை செய்கின்றனர். எனது குத்பாக்களின் குறிப்பையும் எடுத்தும் கொள்கின்றனர். பிறகு தனது தர்ஸுகளிலும், கூட்டங்களிலும், வாரம் முழுவதும் ஏதாவதொரு விஷயத்தை எடுத்து அறிவுரை கூறுகின்றனர். அதற்கு ஜமாஅத் உறுப்பினர்களிடம் நல்ல தாக்கமும் ஏற்படுகிறது. ‘தர்ஸ் கேட்டு எனது மார்க்க அறிவு அதிகமாகி



இருக்கிறது. இன்ன செயலை சரியான முறையில் செய்யும் வழிமுறை தெரிய வந்தது. எங்களின் சோம்பேறித்தனங்கள் நீங்கின’ என்று பலர் அதை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். அதற்காக இந்த விஷயத்தைத் தூக்கிக் கொண்டு, பொறுப்பாளர்களும், பொறுப்பில் உள்ளவர்களும், நாம் நமது தர்ஸில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளை எடுத்துக் கூறி விட்டோம். அல்லது மக்கள் காலத்தின் கலீஃபா அவர்களின் குத்பாக்களைக்

கேட்டுக் கொண்டிருகின்றனர். எனவே மீண்டும் மீண்டும் தனியாகவும் பல்வேறு கூட்டங்களிலும் அந்த விஷயங்களை மீண்டும் கூற வேண்டிய அவசியமில்லை அல்லது நினைவூட்டக் கூடிய தேவையில்லை என்று நினைத்துக் கொண்டு உட்காரந்திருந்தால் அது தவறாகும். காலத்தின் கலீ.:.பாவின் அறிவுரை தாக்கத்தை ஏற்படுத்தாத நிலையில், நமது அறிவுரைக்கு என்ன தாக்கம் ஏற்பட்டுவிடப் போகிறது என்ற எண்ணத்தில் கூட நீங்கள் (அறிவுரை செய்யாமல்) நின்று விடக் கூடாது. அது தவறு ஆகும். எந்நிலையிலும் நினைவூட்டுவது அவசியமானதாகும். எனவே ஆதரவுகளைக் கொடுக்க வேண்டிய தேவை எந்நிலையிலும் இருக்கிறது. மேலும் பலவீனமானவர்களுக்கு ஆதவரவு தரக்கூடியவர்களாக மாறுவது பொறுப்புள்ளவர்களின் பணியாகும். சிலரோ தாமாகவே புரிவதற்கு முயற்சி செய்கின்றனர். பலர், நாங்கள் குத்பாவை இரண்டு முறை மூன்று முறை கேட்டோம் ஆனால் எங்களுக்கு கருத்து புரியவில்லை என்று எனக்கு எழுதுகின்றனர். ஆனால் ஒவ்வொருவரும் தானே கவனம் செலுத்துவதில்லை. எனவே மார்க்கப் பணிக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள், பொறுப்பில் இருப்பவர்கள் பலவீனமானவர்களுக்கு ஆதரவு கொடுக்கக் கூடிவர்களாக மாற வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் எந்நிலையிலும் அவர்களுக்காக முயற்சி செய்ய வேண்டும்." (ஜுமுஆ பேருரை 30.01.2015).

அவ்வாறே இன்னொரு சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"கிலா.:.பத் தொடர்பாக ஜமாஅத்துக்கு எவ்வளவு அதிகமான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டுமோ அவ்வளவு அதிகமாக அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை என்பதை நானும் ஒருமுறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்றின் மூலமாக கூறியிருந்தேன். இப்போது நான் கூறியதற்குப் பிறகு மாநாடுகளில் சொற்பொழிவுகள் தொடங்கி விட்டன என்றாலும் கூட காலத்தின் கலீ.:.பாவின் பேச்சுகளைக் கேளுங்கள். அவற்றின்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். கிலா.:.பத்துடன் உங்களின் தொடர்பை அதிகமாக்குங்கள் என்ற விஷயத்தை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் தேவை இருக்கிறது. எவர்கள் இந்த விஷயத்தைப் புரிகின்றார்களோ அவர்கள் தமது நிலைகளிலும் அசாதாரணமான மாற்றங்களை உணர்கின்றனர். அப்படிப்பட்டவர்களின் கடமை என்னவெனில், திருமண நிகழ்ச்சியில் சில இடங்களில் பேரீத்தம் பழம் விநியோகிக்கப்படுகிறது. அப்போது மக்கள் அவற்றைப் பெறுவதற்காக தமது பைகளை விரிக்கின்றனர். இந்தப் பழக்கம் சில மக்களிடம் இருக்கின்றது. அவ்வாறே காலத்தின் கலீ.:.பா சீர்திருத்தத்திற்காக ஏதாவது கூறினால், அதை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் ஜமாஅத்தின் நபர்களுக்கு முன்னால் அதை மீண்டும் மீண்டும் கூறுங்கள். மழுங்கிய மூளை கொண்டவரும் புரிந்து கொள்ளும் அளவுக்கு, மார்க்கத்தின் சரியான முறையில் நடப்பதற்கான வழி கிடைத்து விடும் அளவுக்கு கூறுங்கள்." (ஜுமுஆ பேருரை 29.05.2015).




ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: "காலத்தின் கலீ.:.பாவின் குரல்களுக்கு செவிமடுக்கவில்லை என்றால், படிப்படியாக நீங்கள் இறைவனுடைய அருள்களிலிருந்து உங்களை தொலைவில் கொண்டு சென்று கொண்டே இருப்பது மட்டுமின்றி, உங்கள் தலைமுறைகளையும் தொலைவில் செல்ல வைத்துக் கொண்டே இருப்பீர்கள்."

பிறகு நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.:.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துங்கள். நமது தர்பிய்யத்திற்காக, நமது அறிவு, ஆன்மிகம் அதிகமாக வேண்டும் என்பதற்காக அல்லாஹ் நமக்கு வழங்கியிருக்கும் இந்த அருட்கொடையிலிருந்து உங்கள் வீட்டினரை பயன்பெறுபவர்களாக ஆக்குங்கள். நமது தலைமுறை அஹ்மதிய்யத்தில் நிலைநிற்பவர்களாக இருக்கும் வகையில் அவ்வாறு செய்யுங்கள். எனவே நாம் நம்மை M.T.A-வுடன் இணைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இப்போது குத்பா மட்டுமின்றி இன்னும் பல நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் வருகின்றன. அவை ஆன்மிக முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கின்ற அதே நேரத்தில், அறிவு முன்னேற்றத்திற்கும் காரணமாக இருக்கின்றன. ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தர்பிய்யத் ஏற்பட வேண்டும் என்பதற்காக ஜமாஅத் இதற்காக ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான பணங்களை செலவு செய்கின்றது. ஜமாஅத் உறுபினர்கள் இதிலிருந்து முழுமையாக பயன் பெறவில்லை என்றால், அவர்கள் தம்மைத்தாமே இழப்பிற்குரியவர்களாக ஆக்கிக் கொள்வார்கள்...... M.T.A-வின் இன்னோர் அருள் என்னவெனில், இது ஜமாஅத்தை கிலா.:.பத்தின் அருள்களுடன் இணைப்பதற்கான ஊடகமாக இருக்கிறது. எனவே இதிலிருந்து பயனடைய வேண்டும்." (ஜுமுஆ பேருரை 18.10.2013)

தஜ்ஜாலிய சமுதாயம் மேலோங்கி இருக்கும் இந்தக் காலத்தில் மனிதன் இறைவனால் வழங்கப்பட்ட அமைப்புடன் இணைந்திருக்காவிட்டால் தப்பிக்க முடியாது என்ற விஷயம் திருக்குர்ஆன், ஹதீஸின் ஒளியிலிருந்து ஒரு வெளிப்படையான உண்மையாக இருக்கிறது. மேலும் அல்லாஹ் -வின் மகத்தான பேரருள் என்னவெனில், அவனால் வழங்கப்பட்ட இந்த அமைப்பின் தலைவர் நம்மை ஒவ்வோர் அடியிலும், எவ்வாறு, எந்த அளவுக்கு கிலா.:.பத்துடன் ஒன்றியிருக்க வேண்டும் என்ற வழிகாட்டல் வழங்கிவாறு நமக்குக் காட்டி விடுகிறார்கள். அதன்படி, நம் அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.:.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உள்ளத்தை மிகவும் ஈர்க்கக் கூடிய கோணத்தில் ஒரு சம்பவத்தின் மூலமாக நமக்கு வழிகாட்டியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

"ஒரு சம்பவம் வருகிறது. மஹ்மூது கஸ்னவி என்ற ஒரு மன்னரின் ஒரு குறிப்பிட்ட படைத் தளபதி இருந்தார். மிகவும் நெருக்கமுள்ள நபராக இருந்தார். அவர் பெயர் இயாஸ்

ஆகும். மிகவும் நன்றியுணர்வுள்ளவராக இருந்தார். தனது நேரங்களையும் நினைவில் கொள்பவராக இருந்தார். நான் எங்கிருந்து எழுந்து எங்கு சென்றடைந்திருக்கிறேன் என்பது அவருக்குத் தெரியும். மேலும் அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்பவராக இருந்தார். மேலும் மன்னரின் பேருதவிகளையும் நினைவில் கொள்பவராக இருந்தார். ஒருமுறை ஒரு போரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த போது மன்னர் தனது படையுடன் சென்று கொண்டிருந்தார். அவர் ஓரிடத்தில் கூடாரமிட்ட பிறகு, இயாஸ் தனது சிறிய படைப் பிரிவுடன் மறைந்து விட்டார் என்று மன்னர் பார்த்தார். அப்போது மன்னர், மற்ற படைத் தளபதிகளிடம், அவர் எங்கே சென்று விட்டார் எனக் கேட்டார். மன்னருக்கு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள், மன்னரை பொய்யாக புகழ்ச்சி செய்பவர்களாக இருந்தவர்கள், இயாஸை மன்னரின் பார்வைகளிலிருந்து கீழே விழ வைக்க வேண்டும் என்ற முயற்சியில் இருந்தவர்கள், இயாஸின் குறைகளைத் தேடிக்கொண்டிருந்தவர்கள் மன்னருக்கு முன்னால் அவரைப் பற்றிய தவறான எண்ணத்தை உருவாக்கும் இந்த சந்தர்ப்பத்தை நல்லதாகக் கருதி, தனது தவறான எண்ணம் எனும் பாவத்தில் மன்னரையும் இணைக்க விரும்பினர். அவர்கள் மன்னரின் உள்ளத்தில் தவறான எண்ணம் தோன்றும் அப்படிப்பட்ட விஷயங்களைக் கூறத் தொடங்கி விட்டனர். மன்னருக்கு எந்நிலையிலும் தனது நன்றியுணர்வுள்ள தொண்டரைப் பற்றித் தெரிந்திருந்தது. அவர் தவறாக எண்ணம் கொள்ளவில்லை. அவர், சரி. கொஞ்ச நேரம் பார்ப்போம். அவர் வந்து விடுவார். எங்கு சென்றிருந்தீர்கள் என்று அவரிடமே கேட்போம் என்றார். அதற்குள் அந்த தளபதி தனது படைக் குழுவுடன் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருடன் சிறைப்பிடிக்கப்பட்ட ஒருவரும் இருந்தார். மன்னர் அவரிடம், நீங்கள் எங்கு சென்றிருந்தீர்கள் என்று கேட்டார். அவர், உங்கள் பார்வை மீண்டும் மீண்டும் முன்னால் இருக்கும் மலையின் பக்கம் சென்று கொண்டிருந்ததை நான் பார்த்தேன். ஏதோ ஒரு விஷயம் இருக்கிறது; நான் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் ஆய்வு செய்ய வேண்டும் என்பதை நான் புரிந்து கொண்டேன். நான் ஆய்வு செய்யச் சென்றபோது இப்போது நான் சிறைப்பிடித்து வந்திருக்கும் இந்த மனிதர் ஒரு பெரிய கல்லின் பின்னால் ஒளிந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். மன்னர் அங்கிருந்து கடந்து செல்லும்போது உங்கள் மீது அம்பு எய்த வேண்டும் என்பதற்காக அவரது கையில் வில்லும், அம்பும் இருந்தது என்று கூறினார். அப்போது மன்னரின் உள்ளத்தில் தவறான எண்ணத்தை உருவாக்க முயற்சி செய்து கொண்டிருந்த அங்குள்ள மற்ற தலைவர்கள் அனைவரும் இந்த விஷயத்தில் வெட்கமடைந்தனர்.”

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: “இந்த சம்பவத்தில் தவறாக எண்ணம் கொள்வது என்ற பாடம் மட்டுமின்றி இன்னொரு விஷயமும் கிடைக்கிறது. இயாஸ் எல்லா நேரமும் மன்னர் மீது கண்ணும் கருத்துமாக இருந்தார். மன்னரின் எல்லா சைகைகளையும் புரிந்து அதன்படி செயல்பட முயற்சி செய்து கொண்டிருந்தார். எனவே எவருடன் அன்பு, பைஅத் இருப்பதாக வாதம் இருக்கிறதோ அவருடைய எல்லா கட்டளைகளையும் செயல்படுத்த வேண்டும். அவருடைய எல்லா சைகைகளின் படியும், கட்டளையின்படியும் செயல்படுவதற்காக ஒவ்வோர் அஹ்மதியும் எல்லா நேரமும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின், அவனது தூதர் (ஸல்) அவர்களின், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எல்லா கட்டளைகளையும் இன்னும் கூறுவதாயின், எல்லா சைகைகளையும் புரிவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.” (ஜுமுஆ பேருரை 26.05.2006).

(தொடரும்...)

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

‘நீங்கள் அனைவரும் இமாமின் சைகையின்படி நடங்கள். அவரது கட்டளையிலிருந்து அணுவளவும் இங்கும் அங்கும் செல்லாதீர்கள். அவர் கட்டளையிடும்போது முன்னால் செல்லுங்கள். அவர் எதன் பக்கம் முன் செல்வதற்குக் கட்டளையிடுகிறாரோ முன் செல்லுங்கள். எங்கிருந்து விலகுவதற்குக் கட்டளையிடுகிறாரோ அங்கிருந்து விலகி விடுங்கள்.’ (அன்வாருல் உலூம் தொகுதி 14 பக்கம் 515-516)

## ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

‘.....இந்த குத்பாவில் கலீஃபா அவர்கள் இந்த விஷயத்தைக் கூறியிருந்தார்கள் என்று ஒருவர் ஏதாவது தூதை எடுத்துக் கூறுவது மற்றும் குத்பாவில் தானே அமர்ந்து அந்த விஷயத்தைக் கேட்பது ஆகிய இந்த இரண்டிற்கும் வானத்திற்கும், பூமிக்குமான வித்தியாசம் இருக்கிறது.’ (ஜுமுஆ பேருரை 08.01.1993)

## ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

‘.....எனது குத்பாக்களையும், பல்வேறு நிகழ்ச்சிகளையும் கண்டிப்பாகக் கேளுங்கள். சில பொறுப்பாளர்கள் கூட எனது குத்பாக்களை முறையாகக் கேட்பதில்லை என்று நான் ஆய்வு செய்திருக்கிறேன்..... உலகில் எல்லா இடங்களிலும் அஹ்மதிய்யத்தின் போதனை பற்றி உலகிற்கு தெரியும் வகையில் உங்களை நீங்களே இவற்றுடன் கண்டிப்பாக இணையுங்கள்.’ (குத்பா ஜுமுஆ 27.10.2013)

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



10

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

### நான்காவது அத்தியாயம்

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ الرَّحْمٰنِ الرَّحِيْمِ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ

(அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன், அர்ரஹ்மானிர் ரஹீம், மாலிகி யவ்மித்தீன் ஆகிய வசனங்கள் தொடர்பான விளக்கவுரை

حَمْدٌ (ஹம்து - புகழ்) என்பது ஒருவருடைய நல்ல செயலின்போது புகழுக்கு உரியவனுக்காகக் கூறப்படும் புகழ்ந்துரை ஆகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும் مَدْحٌ (மதஹ்) என்பது எண்ணத்தின் அடிப்படையில் அருள் செய்யும் அந்த அருளாளனுக்குக் கூறப்படும் சொல் ஆகும். அவன், தான் நாடுபவருக்கு பேரருள் புரிகின்றான். உண்மையில், حَمْدٌ (ஹம்து - புகழ்) என்பது, எவன் எல்லா அருள்களும், ஒளிகளும் தோன்றும் இடமாக இருக்கின்றானோ, உணர்வற்ற நிலையிலோ, கட்டாயத்தினாலோ இல்லாமல் அகப் பார்வையுடன் பேரருள் புரிகின்றானோ அவனுக்கு மட்டுமே அதற்குரிய முறையில் உரியதாக இருக்கிறது. மேலும் இந்தப் பொருள் خَبِيْرٌ (ஹபீர்) நன்கு தெரிந்தவனாகவும் بَصِيْرٌ (பஸீர்) நன்கு அகப் பார்வை கொண்டவனாகவும் இருக்கின்ற இறைவனிடம் மட்டுமே காணப்படுகிறது.

அவனே பேரருள் பாலிப்பவன் ஆவான். முதலிலும், இறுதியிலும் அனைத்து பேரருள்களும் அவனிடமிருந்தே வெளிப்படுகின்றன. இந்த உலகிலும், மறு உலகிலும் உண்மையான حَمْدٌ (ஹம்து - புகழ்) என்பது அவனுடைய உயர் தகுதிக்கே உகந்ததாகும். மேலும் எந்தப் புகழ் மற்றவர்களுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றனவோ அவை அனைத்தின் உண்மையான திரும்புமிடமும் அவனே ஆவான். இந்த வசனத்தில் حَمْدٌ (ஹம்து) என்ற சொல், கம்பீரமான இறைவனால் வழங்கப்பட்ட மூலச் சொல் ஆகும். அது مَعْرُوْفٌ (ம.்.ரூ.்.ப் - அறியப்பட்டது) மற்றும் مَجْهُوْلٌ (மஜ்ஹூல் - அறியப்படாதது) ஆகிய இரண்டையும் கொண்டதாகும். மேலும் فَاعِلٌ (.்.பாயில் - எழுவாய்) மற்றும் مَفْعُوْلٌ (ம.்.ப்வூல் - செயப்படுபொருள்) ஆகிய இரண்டிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இதன் கருத்து, அல்லாஹ் மட்டும்தான் முழுமையான முறையில் مُحَمَّدٌ (முஹம்மது - புகழப்படுபவன்) மற்றும் اَحْمَدُ (அஹ்மது - அதிகமாகப் புகழ்பவன்) ஆவான். மேலும் இந்த விளக்கத்தைக் குறிப்பிடும் சூழ்நிலைச்சான்று என்னவெனில், அல்லாஹ், حَمْدٌ (ஹம்து - புகழ்) என்பதற்குப் பிறகு இறைஞானம் பெற்றவர்களின் பார்வையில் இந்தக் கருத்தை அவசியமானது என்று உணர்த்தும் அந்தப் பண்புகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறான். அல்லாஹ் حَمْدٌ (ஹம்து) என்ற சொல்லில் தனது தொன்மையான ஒளியில் காணப்படுகின்ற அந்தப் பண்புகளின் பக்கம் சுட்டிக்காட்டி இருக்கின்றான்.

பிறகு அவன் حَمْدٌ (ஹம்து - புகழ்) என்ற சொல்லின் விளக்கத்தைக் கூறியிருக்கிறான். மேலும் رَحْمٰنٌ (ரஹ்மான்) மற்றும் رَحِيْمٌ (ரஹீம்) பற்றி குறிப்பிடும் சந்தர்ப்பத்தில், தனது முகத்திலிருந்து திரையை அகற்றுகின்ற, திரையில் அமர்ந்திருக்கும் அத்தகைய புதுமணப் பெண்ணின் வடிவில் எடுத்துரைத்திருக்கிறான். ஏனெனில் 'ரஹ்மான்' என்ற சொல், 'ஹம்து' எனும் செய்வினை மூலப் பெயரிலிருந்து உருவானது என்பதைக் குறிக்கிறது. அவ்வாறே 'ரஹீம்' என்ற சொல், 'ஹம்து' எனும் செயப்பாட்டு வினை மூலப் பெயரிலிருந்து உருவானது என்பதைக் குறிக்கிறது. இது அறிவுடையவர்களுக்கு மறைமுகமானதல்ல. மேலும் பரிசுத்தமானவனும், மேலானவனுமாகிய அல்லாஹ் رَبُّ الْعَالَمِيْنَ (ரப்புல் ஆலமீன் - அனைத்துலகங்களையும் படைத்து பரிபாலிக்கின்றவன்) என்ற தனது கூற்றில், அவனே எல்லாவற்றையும் படைத்தவன் ஆவான் என்பதையே சுட்டிக் காட்டியிருக்கிறான். மேலும் வானங்களிலும், பூமியிலும் இருப்பவை எல்லாம் அவனிடமிருந்தே இருக்கின்றன. மேலும் பூமியில் நேர்வழி பெற்றவர்களின் கூட்டமும், தடுமாறியவர்கள், வழிதவறியவர்களின் கூட்டமும் காணப்படுகின்றன. அவையெல்லாம் عَالَمِيْنَ (ஆலமீன் - அனைத்து உலகங்கள்) என்பதில் அடங்கும். சில நேரத்தில் வழிகேடு, கு.்.ப்ர், தீமை, வரம்பு மீறுவது ஆகியவற்றின் உலகம் எந்த அளவுக்கு அதிகமாகி விடுகிறதென்றால், பூமி அநீதி, கொடுமையால் நிரம்பி விடுகிறது. மக்கள் கம்பீரமான இறைவனின் வழிகளை விட்டு விடுகின்றனர்.மேலும் عُبُوْدِيَّتْ (உபூதிய்யத் - இறைவனுக்கு அடிமையாக இருத்தல்) என்பதன் உண்மை நிலையைப் புரிய முடிவதில்லை. மேலும் இன்னொரு பக்கம் رُبُوْبِيَّتْ (ருபூபிய்யத் - படைத்து காத்தோம்பும் பண்பு) என்பதன் உரிமையையும் நிறைவேற்ற முடிவதில்லை.

எனவே காலம் ஓர் இருண்ட இரவு போன்று ஆகி விடுகிறது. மேலும் மார்க்கம் அந்த கடுமையின் கீழ் நாசமாக்கப்படுகிறது. பின்னர் இதற்குப் பிறகு அல்லாஹ் இன்னோர் உலகத்தை வெளிப்படுத்துகிறான். அதன் விளைவாக பூமி இன்னொரு பூமியாக மாற்றப்பட்டு விடுகிறது. மேலும் வானத்திலிருந்து ஒரு புதிய தக்தீர் (இறை நியதி) இறங்குகிறது. மேலும் மக்களுக்கு இறைஞானத்தை அறியும் உள்ளமும், இறையருள்களுக்கு நன்றி செலுத்தும் நாவும் வழங்கப்படுகிறது. அதனால் அவர்கள் தமது உள்ளங்களை பெருமைக்குரியவனின் சந்நிதியில் நசுக்கப்பட்ட ஒரு பாதையைப் போன்று ஆக்கிக் கொள்கின்றனர். மேலும் அச்சம் மற்றும் நம்பிக்கையின் நிலையில் அவன் சந்நிதியில் வெட்கத்தால் குனிந்த கண்ணுடனும், இறையருள் எனும் தேவைகளின் திசையின் பக்கம் கவனம் செலுத்தும் முகத்துடனும் முன்னால் வந்து நிற்கின்றனர். மேலும் இறை அடிமைத்துவத்தில் உயர்ந்த மன உறுதி, மிக உயர்ந்த மேன்மையின் உச்சியை எட்டியுள்ளது.

மேலும் விவகாரம் மிகவும் வழிகேட்டின் எல்லையை அடைந்து விடும்போது, நிலைமையின் மாற்றத்தின் காரணமாக மக்கள் விலங்குகளையும், கால்நடைகளையும் போன்று ஆகி விட்டால் (தூயவர்கள் ஆகிய) அவர்களின் தேவை அதிகரித்து விடுகிறது. பின்னர் அந்த நேரத்தில், இந்த எல்லா இருள்களையும் அகற்றுவதற்காகவும், இப்லீஸ் கட்டிய அந்தக் கட்டடங்களையும், அவன் நிலைநாட்டிய கூடாரங்களையும் அழித்தொழிப்பதற்காகவும் வானத்தில் இருந்து அத்தகையவரை அனுப்புவதை இறைவனின் கருணையும் தொன்றுதொட்டு இருக்கின்ற இறைவனின் அருளும் அவசியமாக்குகின்றது. அப்போது ஷைத்தானிய படைகளை அகற்றுவதற்காக ரஹ்மான் ஆகிய இறைவனிடமிருந்து ஓர் இமாம் இறங்குகிறார். மேலும் எவருக்கு இரண்டு கண்கள் இருக்கின்றனவோ, அவர்தான், போரிட ஆயத்தமாக இருக்கும் அந்த இரண்டு படைகளையும் காண்கின்றார். எதுவரையென்றால், பொய்யரின் கழுத்துகளில் விலங்குகள் மாட்டப்படுகின்றன. மேலும் பொய் எனும் காணல் நீரைப் போன்ற சான்று என்பது இல்லாமல் போய் விடுகிறது. மேலும் அந்த இமாம் எப்போதும் பகைவர்களை வெற்றி கொள்கின்றார். அவர் நேர்வழி பெறுபவர்களின் உதவியாளராகவும், நேர்வழியின் அடையாளங்களை உயர்த்துபவராகவும், இறையச்சத்தின் வசந்த காலங்களுக்கு வாழ்வளிக்கக் கூடியவராகவும் இருக்கிறார். எதுவரை -யென்றால், (இமாம் ஆகிய) அவர் கு.ஃ.ப்ர் எனும் ஷைத்தான்களை சிறைப்பிடித்து விட்டார்; பொய் எனும் மிருகங்களை அடக்கி விட்டார்; அவற்றின் கழுத்துகளில் விலங்கை மாட்டி விட்டார்; பித்அத்துகளின் கட்டடத்தை தகர்த்து விட்டார். மேலும் அதன் குவிமாடத்தை உடைத்து விட்டார் என்றெல்லாம் மக்கள் அறிந்து கொள்ளத் தொடங்கி விடுகின்றனர்.

மேலும் அவர் ஈமானின் கலிமாவை ஒன்று சேர்த்தார். மேலும் அதன் காரணிகளை முறைப்படுத்தி விட்டார். மேலும் வானத்தின் ஆட்சியை நிலைநாட்டிவிட்டார்; அதன் எல்லைப் புறங்களை உறுதியாக்கி விட்டார். மேலும் அதன் நிலையை சீரமைத்து விட்டார். மேலும் எல்லா விஷயங்களையும் சரியாக்கி விட்டார். மேலும் நடுங்கிக் கொண்டிருந்த உள்ளங்களுக்கு அமைதியை வழங்கினார். மேலும் பொய் கூறும் நாவுகளை ஊமையாக்கி விட்டார். இருண்ட உள்ளங்களுக்கு ஒளியை வழங்கினார். மேலும் பழைய ஆட்சியை புத்துயிரூட்டி விட்டார். மேலும் மிக்க அதிகமாக செயல்படும் அல்லாஹ் அவ்வாறே செய்கிறான். எதுவரை -யென்றால், இருள்களும், வழிகேடுகளும் விலகி விடுகின்றன. அப்போது பகைவன் தனது குதிகால்களுக்குப் பின்னால் திரும்பிச் சென்று விடுகிறான். தன்னால் நடப்பட்ட கூடாரங்களை அழித்து நாசமாக்கி விடுகின்றான். மேலும் அவர்கள் போட்டிருந்த முடிச்சுகளை அவிழ்த்து விடுகின்றான். நபிமார்கள், இறைதூதர்கள், அல்லாஹ்வின் நல்லடியர்கள் உண்மையான அடியார்கள் ஆகியவர்களே எல்லா உலகங்களிலும் மிகச் சிறந்தவர்களாகவும், எல்லாப் படைப்பினங்களை விடவும் அதிக நேசத்திற்குரியவர்களாக -வும் இருக்கின்றனர்.

ஏனெனில் (நபிமார்கள், உண்மையான அடியார்கள் ஆகிய) இந்தப் பிரிவினர் மற்றவர்களுடன் ஒப்பிடுகையில், அவர்களை விட உயர்ந்த ஒழுக்கங்களைப் பரப்புவது, இருள்களை அகற்றுவது, ஒழுக்கங்களை நெறிமுறைப் -படுத்துவது, தனக்காகவும், உலகங்களில் வாழ்கின்றவர் -களுக்காகவும் நல்லதை நாடும் எண்ணம் கொண்டவர்களாக இருப்பது, சிறந்ததையும், நன்மையையும் பரப்புவது, குழப்பத்தையும், தீமையையும் வேருடன் பிடுங்கி எடுப்பது, நன்மைக்கான கட்டளையிடுவது, தீமைகள் மற்றும் மிருகங்களைப் போன்று தீய ஆசைகளின் மீதான விருப்பத்திலிருந்து தடுப்பது, உலகத்தைப் பரிபாலிக் -கின்றவன் பக்கம் அன்பு கொள்ள வைப்பது, புதிய மற்றும் பழைய தங்கம், வெள்ளி ஆகிய செல்வத்திலிருந்து தொடர்பைத் துண்டிப்பது, அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதில் முழு ஆற்றலுடனும், முழு ஆயத்தமாக இருப்பதுடனும் உறுதியாக நிலைத்திருப்பது, தனது தொகுக்கப்பட்ட படைகளுடனும், ஒன்று சேர்க்கப்பட்ட ஜமாஅத்துகளுடனும் ஷைத்தானின் சந்ததிகளின் மீது தாக்குதல் நடத்துவது, அன்பிற்குரியவனுக்காக உலகத்தை விட்டு விடுவது, மேலும் (ஷைத்தான் ஆகிய) அவனுடைய பச்சைப் பசுமையான இடங்களிலிருந்து விலகி இருப்பது, நாட்டை விட்டுவிடுவதைப் போன்று அதன் தண்ணீரிலிருந்தும், மேயும் இடத்திலிருந்தும் தனியாகி விடுவது, இறை சந்நிதியில் தலையை குனிந்து வைத்திருப்பது ஆகியவற்றில் அவர் முதன்மையில் இருக்கிறார்.

அது எத்தகைய சமுதாயம் என்றால், அவர்கள் இறையன்பில் மெய்மறந்த நிலையில் இருக்கும் நிலையிலும், சமுதாயத்திற்காக துஆ செய்து கொண்டிருக்கும் நிலையிலும் மட்டுமே அவர்களுக்கு தூக்கம் வருகிறது. உலகவாதிகளின் பார்வையில் இந்த உலகம் மிகப் பெரிய அழகானதாகவும், நல்ல வடிவத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது. ஆனால் (உலகமாகிய) அது (அல்லாஹ்வைச் சார்ந்தவர்கள் ஆகிய) அவர்களின் பார்வைகளில் அசுத்தத்திலும் மிக அசுத்தமானதும், இறந்ததிலும் அதிக நாற்றமடிக்கக் கூடியதும் ஆகும். இந்த உலகம் மிகப் பெரிய அழகானதாகவும், நல்ல வடிவத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது. ஆனால் (உலகமாகிய) அது (அல்லாஹ்வைச் சார்ந்தவர்கள் ஆகிய) அவர்களின் பார்வைகளில் அசுத்தத்திலும் மிக

அசுத்தமானதும், இறந்ததிலும் அதிக நாற்றமடிக்கக் கூடியதும் ஆகும். (அல்லாஹ்வைச் சார்ந்தவர்கள் ஆகிய) அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் முழுமையாக கவனம் செலுத்துகின்றனர் உண்மையான மனதுடன் அவன் பக்கம் முழுமையாகக் குனிகின்றனர். வீட்டின் அடித்தளங்களுக்கு, அதன் மிஹ்ராப் (திசை மாடம்), கட்டப்பட்ட வராந்தாக்களை விட முதன்மை இருப்பதைப் போன்றே, இந்த சான்றோர்கள் இந்த உலகில் நல்லவர்களின் பிரிவினர்களில் ஒவ்வொரு பிரிவை விடவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். மேலும் அந்த நபிமார்கள் அனைவரை விடவும் மிகவும் அதிக முழுமையானவர், மிகவும் சிறந்தவர், அதிக இறைஞானம் கொண்டவர், மிகவும் சிறந்த அறிஞர் நம்முடைய நபி முஹம்மது முஸ்த.்.பா (அலை) அவர்கள் ஆவார்கள். நபி (அலை) அவர்கள் மீது இந்த பூமியிலும், உயர்ந்த வானங்களிலும் எல்லா விதமான அருளும், கருணையும் சாந்தியும் உண்டாவதாக.

நிச்சயமாக எல்லாரையும் விட அதிக தீயவர்கள், மறைவானதன் இகசியங்களைப் பற்றி தகவல் பெறாமலேயே நபி (ஸல்) அவர்களின் மீது நாவை நீட்டியவர்கள், குற்றங்களைக் கூறியவர்கள், குறை கூறியவாறு நபி (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களே ஆவர். மேலும் பூமியில் சாபமிடப்படுபவர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? ஆனால் அல்லாஹ் வானத்தில் அவர்களைப் புகழ்கின்றான். மேலும் இந்த உலகில் எத்தனை பேர் கண்ணியமளிக்கப் -படுகின்றனர்? ஆனால் நற்கூலி, தண்டனையின் நாளில் அவர்கள் இழிவுக்குள்ளாக்கப்படுவார்கள்.

பிறகு பரிசுத்தமான அல்லாஹ் 'ரப்பில் ஆலமீன்' என்ற தனது கூற்றில், அவன் ஒவ்வொரு பொருளையும் படைத்தவன் ஆவான். அவன் வானத்திலும், பூமியிலும் புகழப்படுகிறான். மேலும் அவனைப் புகழ்கின்றவர்கள் அவனைப் புகழ்வதில் நிரந்தரத்தன்மையை மேற்கொள்கிறார்கள் என்பதன் பக்கம் சுட்டிக் காட்டியிருக்கிறான். மேலும் அவர்கள் அவனது நினைவில் மாய்ந்தவாறு உறுதியாக அமர்ந்து விடுகின்றனர். ஒவ்வொரு பொருளும், எல்லா நேரத்திலும் அவனை தஸ்பீஹ் செய்கின்றன; (அவன் தூய்மையை எடுத்துரைக்கின்றன); புகழ்கின்றன. மேலும் ஓர் இறையடியார் தனது மனஇச்சையை ஒதுக்கி வைத்து விடும்போது, தனது உணர்ச்சிகளிலிருந்து விடுபட்டு அல்லாஹ்விடத்திலும், அவனது வழிகளிலும், அவனை வணக்குவதிலும் தன்னை மாய்த்துக் கொள்ளும் போது தனது அருள்களால் தன்னை படைத்துப் பரிபாலிக்கின்ற அந்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ளும்போது அவர் எல்லா நேரமும் அவனைப் புகழ்கின்றார். மேலும் முழு உள்ளமும் இன்னும் கூறுவதென்றால், உடலின் ஒவ்வோர் அணுவுடனும் அவனை நேசிக்கின்றார். அந்த நேரத்தில் அவர் ஆலமீன் (உலகங்கள்) என்பதில் ஓர் ஆலம் (உலகம்) ஆகி விடுகின்றார்.

இதன் காரணமாகத்தான் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு أَعْلَمُ الْعَالَمِيْن (அ.்.லமுல் ஆலமீன் - உலகங்களிலெல்லாம் மிக்க அறிந்தவன்) ஆகிய இறைவனின் நெறிநூலில் أُمَّةً (உம்மத்) என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. பிறகு ஆலமீனின் இன்னொரு காலம் இருந்தது. அதில் அந்த மக்களிடம் காத்தமுன்னபிய்யீன் அனுப்பப்பட்டார்கள். மேலும் இன்னோர் ஆலம் (உலகம்) எதுவென்றால், அதில் அல்லாஹ் உண்மையைத் தேடுபவர்களின் மீது கருணை காட்டியவாறு இறுதி காலத்தில் நம்பிக்கை கொண்டவர்களிடம் آخَرِيْنَ (ஆகரீன் மக்களை - மற்ற மக்களை) கொண்டு வருவான். لَهُ الْحَمْدُ فِي الْأُولَىٰ وَالْآخِرَةِ (லஹுல் ஹம்து ்.பில் ஊலா வல் ஆகீரா - தொடக்கத்திலும், மறுமையிலும் எல்லாப் புகழும் அவனுக்கே உரியது என்ற அல்லாஹ்வின் (28:71) கூற்று இதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. இதில் இரண்டு أَحْمَدُ (அஹ்மது)களைச் சுட்டிக் காட்டி இருக்கிறான். மேலும் இந்த இரண்டு أَحْمَدُ (அஹ்மது)களையும் தனது எல்லையற்ற அருட்கொடைகளில் சேர்த்திருக்கின்றான். இந்த இருவரின் முதலாமவர், நம்முடைய அஹ்மது முஸ்த.்.பா மற்றும் நம்முடைய ரஸூல் முஜ்தபா ஆவார்கள். இரண்டாமவர், இறுதி காலத்தின் அஹ்மது ஆவார். மிகவும் அருள் பாலிக்கும் இறைவன் அவருக்கு மஸீஹ் என்றும், மஹ்தி என்றும் பெயர் வைத்திருக்கிறான்.

இந்த நுட்பமான கருத்தை நான், اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ (அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் - உலகங்களின் இறைவனுக்கே எல்லாப் புகழும்) என்பதிலிருந்து பெற்றிருக்கிறேன். எனவே கவனிக்கின்ற, சிந்திக்கின்ற ஒவ்வொருவரும் கவனிக்கவும், சிந்திக்கவும் வேண்டும். ஆலமீன் என்பதன் கருத்து, படைப்பினங்களை படைக்கின்ற இறைவனைத் தவிரவுள்ள உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஆகும். அவை ஆன்மாக்களின் உலகமாக இருந்தாலும், உடல்களின் உலகமாக இருந்தாலும், பூமியிலுள்ள படைப்பினங்களாக இருந்தாலும், சூரியன், சந்திரன் ஆகிய அண்ட சராசரங்களிலுள்ள படைப்புகளாக இருந்தாலும் சரியே என்பது உங்களுக்குத் தெரியும். எனவே எல்லா உலகமும் படைப்பாளனின் رُبُوْبِيَّتْ (ருபூபிய்யத் - படைத்து பரிபாலிப்பது) என்பதன் கீழ் வருகின்றன. பின்னர் ருபூபிய்யத்தின் அருள் உள்ளங்களில் சிந்திக்க முடிகின்றதை விடவும் அல்லது நாவுகளில் வெளிப்பட முடிகின்றதை விடவும் அதிக பரந்ததும், அதிக முழுமையானதும், அதிகமான தொகுப்பைப் கொண்டதும் ஆகும்.

பிறகு இதற்குப் பின்னர் . فَيْضٌ عَامٌّ (்.பெய்ஸே ஆம் - பொதுவான அருள்) ஆகும். அது விலங்குகளின், மனிதனின் ந.்.ப்ஸுடன் சிறப்பானதாக ஆக்கப்பட்டுள்ளது. மேலும் அந்தப் பண்பு ரஹ்மானிய்யத்தின் அருள் ஆகும். அல்லாஹ் இதைப் பற்றி தனது 'அர்ரஹ்மான்' என்ற கூற்றில் குறிப்பிட்டிருக்கிறான். மேலும் அதை கனிமப் பொருள்கள், செடி கொடிகள் ஆகியவற்றைத் தவிர்த்து, உயிருள்ள பொருள்களுடன் மட்டும் தொடர்புபடுத்தினான். இதற்குப் பிறகு ஒரு فَيْضَانٌ خَاصٌّ (்.பய்ஸே காஸ் - சிறப்பான அருள்) என்பதாகும். மேலும் அது رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத்) என்பதன் அருள் ஆகும். மேலும் இந்த அருள், எதிர்பார்க்கப்படுகின்ற அருள்களைப் பெறுவதற்காக முழுமையாக முயற்சி செய்கின்ற அந்த ந.்.ப்ஸுக்காக மட்டுமே இறங்குகிறது. எனவே இந்த அருள் ஈமான் கொள்கின்றவர்கள், கண்ணியத்திற்குரிய இறைவனுக்குக் கட்டுப்படுகின்றவர்கள் ஆகியோருக்காக மட்டும் சிறப்பாக்கப்பட்டுள்ளது.

இது அல்லாஹ்வின் கூற்றாகிய, وَكَانَ بِالْمُؤْمِنِيْنَ رَحِيْمًا (வ கான பில் மு.்.மினீன ரஹீமா - அவர் நம்பிக்கை கொண்டவர்

-களுக்கு மீண்டும் மீண்டும் கருணை கட்டுபவராக இருக்கின்றார் (என்பதில் விளக்கப்பட்டுள்ளது.) திருக்குர்ஆன் 33:44 காண்க). எனவே رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத்) என்பது ஈமான் கொண்டவர்களுக்கு சிறப்பிற்குரியதாக்கப்பட்டுள்ளது என்பது திருக்குர்ஆனிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் ரஹ்மானிய்யத்தின் வட்டம் உயிருள்ளவர்களில் எல்லா உயிருள்ளவை மீதும் மிகப் பரந்ததாக இருக்கிறது. எதுவரையென்றால், அகில உலகங்களின் இறைவனுடைய கட்டளையால் ஷைத்தானும் இதிலிருந்து பங்கைப் பெற்றான்.

சுருக்கமாக, 'ரஹீமிய்யத்' என்பது செயல்களால் கட்டமைகின்ற அந்த அருள்களுடன் தொடர்புடையதாகும். மேலும் இது கா∴பிர்கள், வழிகெட்டவர்கள் ஆகியோருக்கு அல்லாமல், நம்பிக்கை கொண்டவர்களுக்கு மட்டுமே உரியதாகும். பிறகு ரஹீமிய்யத்திற்குப் பின்னர் இன்னோர் அருளும் இருக்கிறது. அது முழுமையான நற்கூலியாகவும், நற்பலனாகவும், மக்களுக்கு அவர்களின் நன்மைகள், நற்செயல்கள் ஆகியவற்றின் விளைவு வரை சென்றடைய வைப்பதற்கான அருளாகவும் இருக்கிறது. கண்ணியத்திற்கும், கம்பீரத்திற்கும் உரியவனாகிய இறைவன், مٰلِكِ يَوْمِ الدِّيْنِ (மாலிகி யவ்மித்தீன் - நற்கூலி, தண்டனை கிடைக்கும் நாளின் எஜமான்) என்ற தனது கூற்றில் இதன் பக்கம் சுட்டிக்காட்டி இருக்கின்றான். மேலும் இது رَبُّ الْعٰلَمِيْنَ (ரப்புல் ஆலமீன் - அனைத்துலகங்களையும் பரிபாலிக்கின்றவன்) என்பவனிடம் இருந்துள்ள இறுதியான அருள் ஆகும். இதற்குப் பிறகு அனைத்துலகங்களையும் மிகவும் அதிகமாக அறிபவனாகிய அல்லாஹ்வின் நெறிநூலில் வேறு எந்த அருளைப் பற்றியும் குறிப்பிடப்படவில்லை.

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ (மாலிகி யவ்மித்தீன் - நற்கூலி, தண்டனை கிடைக்கும் நாளின் எஜமான்) என்ற இந்த அருளுக்கும் رَحْمَانِيَّتْ (ரஹ்மானிய்யத்) என்ற அருளுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்னவெனில், رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத்) என்ற பண்பு இறைவழியில் நடக்கும் ஒருவரை அருட்கொடைக்கு ஊடகமாக இருக்கும் அந்த இடம் வரை கொண்டு செல்கின்றது. அடுத்து, நற்கூலி, தண்டனை பற்றியதைப் பொருத்தவரை مَالِكِيَّتْ (மாலிகிய்யத்) என்ற பண்பின் அருள் ஆகும். எனவே (மாலிகிய்யத் பண்பாகிய) அது இறைவழியில் நடக்கும் ஒருவரை அருட்கொடையின் உண்மை நிலை, மறுமையின் பயன்கள், குறிக்கோள்களின் எல்லை, நோக்கங்களின் இறுதி எல்லை வரை சென்றடைய வைக்கின்றது. எனவே இந்த அருள், ஓரிறைவனின் சார்பாக உள்ள இறுதி அருள் ஆகும் என்பது வெளிப்படையானது. மேலும் மனித படைப்பின் உச்சகட்ட குறிக்கோளாகும். மேலும் مَالِكِيَّتْ (மாலிகிய்யத் - அதிபதியாக இருப்பது) என்ற இந்தப் பண்பிலேயே அனைத்து அருட்கொடைகளும் முழுமையடைகின்றன. மேலும் இறைஞானம் மற்றும் தொடர் ஆகியவற்றின் வட்டம் முழுமையடைகிறது.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் கலீ∴பாக்களின் தொடர், مٰلِكِ يَوْمِ الدِّيْنِ (மாலிகி யவ்மித்தீன்) என்ற நுண்ணிய இடத்தில் வந்து முடிவடைந்து விட்டது என்பதை நீர் பார்ப்பதில்லையா? அதன்படி, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அந்தத் தொடரின் இறுதியில் தோன்றினார்கள். போர் மற்றும் போராளிகள் இன்றியே அநீதி, கொடுமை ஆகியவை நீதியாகவும், பேரருதவியாகவும் மாற்றப்பட்டு விட்டது. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ (மாலிகி யவ்மித்தீன்) என்பதிலுள்ள 'தீன்' என்ற சொல்லின் மூலமாக இந்தக் கருத்து புலனாகிறது. ஏனெனில் (தீன் என்ற) இந்தச் சொல், அரபு அகராதி மற்றும் அரபு இலக்கிய அறிஞர்களின் பார்வையில் மென்மை மற்றும் பரிவு என்ற பொருளில் வந்திருக்கிறது. அது, நம்முடைய நபி (ஸல்) அவர்களின் ஒப்புமை கலீமுல்லாஹ் ஆகிய ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடனும், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் கலீ∴பாக்களின் ஒப்புமை நமது கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் கலீ∴பாக் -களுடனும் இருக்க வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்துகிறது. அது என்னவென்றால், இந்தத் தொடரின் கடைசியில் (ஈஸாவாகிய) மஸீஹுக்கு ஒப்பான ஒரு நபர் தோன்ற வேண்டும். மேலும் அவர் சகிப்புத்தன்மையுடன் அல்லாஹ்வின் பக்கம் அழைக்க வேண்டும் போரை நிறுத்த வேண்டும். வெட்டும் வாளை உறையில் போட வேண்டும். மேலும் வாள், ஈட்டிக்குப் பகரமாக ஒளிமிக்க அடையாளங்களால் ரஹ்மான் ஆகிய இறைவனின் பக்கம் மக்களை ஒன்று சேர்க்க வேண்டும்.

இவ்வாறு அவருடைய காலம் மறுமை நாளுக்கும், நற்கூலி மற்றும் தண்டனையின் நாளுக்கும், மரணத்திற்குப் பிறகு திருப்பி எழுப்பப்படும் நாளுக்கும் ஒப்பானதாக இருக்கும். மேலும் பூமி முன்னர் அநீதி, கொடுமை ஆகியவற்றால் நிரம்பி இருந்ததது போன்று, அது ஒளியால் நிரப்பப்பட்டு விடும். (வாக்களிக்கப்பட்டிருக்கும் மஸீஹ் ஆகிய) அவர் يَوْمِ الدِّيْنِ (யவ்மித்தீன்) என்பதற்கு முன்னரே يَوْمِ الدِّيْنِ (யவ்மித்தீன்) என்பதற்கான முன்மாதிரியைக் காட்டுவார் என்றும், இறையச்சம் மரணித்துப்போன பிறகு மக்களை உயிரூட்டுவார் என்றும் அல்லாஹ் தீர்மானித்திருந் -தான். மேலும் இதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும்.மேலும் இதுதான் இந்த எளியவனின் காலமாகும். மேலும் يَوْمِ الدِّيْنِ (யவ்மித்தீன் - இறைதீர்ப்பின் காலம்) என்ற வசனத்தில் இதன் பக்கமே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே சிந்திப்பவர்கள் இது பற்றி சிந்திக்கட்டும். (தொடரும்...)

விவகாரம் மிகவும் வழிகேட்டின் எல்லையை அடைந்து விடும்போது, நிலைமையின் மாற்றத்தின் காரணமாக மக்கள் விலங்குகளையும், கால்நடைகளையும் போன்று ஆகி விட்டால் (தூயவர்கள் ஆகிய) அவர்களின் தேவை அதிகரித்து விடுகிறது. பின்னர் அந்த நேரத்தில், இந்த எல்லா இருள்களையும் அகற்றுவதற்காகவும், இப்லீஸ் கட்டிய அந்தக் கட்டடங்களையும், அவன் நிலைநாட்டிய கூடாரங்களையும் அழித்தொழிப்பதற்காகவும் வானத்தில் இருந்து அத்தகையவரை அனுப்புவதை இறைவனின் கருணையும் தொன்றுதொட்டு இருக்கின்ற இறைவனின் அருளும் அவசியமாக்குகின்றது.




அறிவுபூர்வமான 300 வாதங்களை உள்ளடக்கிய இந்நூல், மனிதகுலத்திற்கு எவ்வாறு நன்மை பயக்கும் என்றும், சந்தேகிப்பவர்களின் அனைத்து சந்தேகங்களையும் மறையச் செய்து, இஸ்லாம் எனும் ஒளியை தன் மகிமையிலும் பொலிவிலும் வெளிப்படுத்தும் என்றும் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் உணர்ந்திருக்க வேண்டும். இக்காலத்தின் பிரச்சினைகளையும், நோய்களையும் அவற்றின் விளைவுகளையும் சரியாக உணராதவர்களும், மார்க்கத்தின்பால் ஆர்வம் இல்லாதவர்களும், அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின்பால் நேசமற்றிருப்பவர்கள் மட்டுமே இத்தகு முக்கிய பணியில் அசட்டை செய்பவர்களாக இருப்பர். நண்பர்களே! கொந்தளிப்பான இக்காலகட்டத்தில் இஸ்லாம் உறுதியாக நிலைத்து நிற்க வேண்டுமாயின் அதனை முற்றுகையிட்டுள்ள வழிகேடு எனும் சக்திகளை அதன் வலிமைக்கு சமமாக உண்மையின் ஆற்றலைக் கொண்டு எதிர்ப்பதன் மூலம் தற்காத்துக் கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் உண்மைக்கு ஆதரவான எண்ணற்ற சான்றுகள் மூலம் உலகம் ஒளிபெறச் செய்யும் போதும், உண்மை எனும் ஒளிக்கதிர்கள் எல்லா திசைகளிலும் பரவும் போதும்தான் உலகத்தை சூழ்ந்துள்ள காரிருளை விலகச் செய்ய இயலும். கருத்து வேறுபாடுகளால் பிளவுபட்டுள்ள இக்காலகட்டத்தில் ஒரு ஆன்மீக ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமாயின், முழுமையான உண்மையின் ரகசியங்களை வெளிப்படுத்தக் கூடியதாக மட்டுமில்லாமல் எதைப் பற்றிய அறிவு மனிதனின் இதயத்திற்கு சாந்தி அளிக்குமோ அந்த அற்புத உண்மை ஊற்றின்பால் கரை சேர்க்க உதவக்கூடிய, முழுக்க முழுக்க பகுத்தறிவின் தொகுப்பாக உள்ள, ஒரு நூலினால் மட்டுமே அது சாத்தியமாகும்.

அன்பார்ந்த பெரியோர்களே! அதீத ஆற்றல் உள்ள அறிவுப்பூர்வமான சான்று -களையும் வாதங்களையும் பயன்படுத்தியே அல்லாமல் நாம் இக்காலத்தில் நமது மார்க்கத்தை தற்காத்துக் கொள்ள முடியும் என கருதுவது அறிவற்ற அசட்டுத்தனமாகும். தங்களது கொள்கையின்பால் பிடிவாதம் எனும் போதையேறி உள்ள மற்றும் விஞ்ஞான வளர்ச்சியால் தங்களது சிந்தனை பாதிக்கப்பட்டுள்ள மக்களை நோக்கிப் பாருங்கள்.

கல்வி அறிவு பெற்றுள்ள மக்கள் ஒரு விசித்திரமான, ஒரு நூதனமான சுதந்திரம் எனும் மனநிலையை உருவாக்கி உள்ளனர். அவர்களது பேராசை பிடித்த இதயங்கள், எளிமை தாழ்மை மற்றும் தூய்மை எனும் நல் ஊற்றுகளில் தோன்றக்கூடிய நன்மைகள் இன்றி இருக்கின்றன. அவர்கள் கற்றுக் கொள்ளும் ஒவ்வொரு காரியமும் அவர் -களை மார்க்கத்தினின்றும் அப்பாலாக்கி விடுகின்றது. அவர்களால் பலர் அவர்களின் ஒட்டுமொத்த அறிவீனத்தின் காரணமாக முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள் -வதற்கு கற்றுக் கொள்ளும் முன்பாகவே தர்க்க ஞானிகள் போல செயல்பட முற்படுகின்றனர்.

திரும்பி வெளிவர முடியாத அளவிற்கு தீமையில் சிக்குண்டு போவதற்கு முன், உண்மை மற்றும் நேர்மையின்பால் இருக்கும் பொருட்டு, உங்களின் குழந்தைகளின் மீதும் உங்கள் சமுதாயத்தின் மீதும் உங்கள் நாட்டு மக்கள் மீதும் கருணை காட்டுங்கள். அவ்வாறு நீங்கள் செய்வீர்களாயின் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் மிகப்பெரிய சேவையை செய்கின்றீர்கள். மேலும் இஸ்லாத்துடன் ஒப்பிடும்போது மற்ற மார்க்கங்களில் விஷய குறைபாடு இருக்கின்றது என்றும் உலகம் அறிந்து கொள்ளும். இறைவனின் இயற்கை சட்டம் நமக்கு போதிப்பது யாதெனில் முயற்சியும் உழைப்பும் வெற்றிக்கு வழிவகுக்கும். மேலும் அலட்சியமாக அசமந்தமாக இருத்தல் பெரும்பாலான விஷயங்களை இழக்கும் துரதிர்ஷ்டவசமான நிலையில் இருக்கச் செய்யும் என்பதே. உண்மையாகவே இருக்கின்ற, இஸ்லாத்தின் உண்மைத் தன்மைகளை, பரவச் செய்ய நீங்கள் முயன்றீர்கள் எனில் உங்களது முயற்சிகளை வீணாகப் போய் விட இறைவன் ஒருபோதும் அனுமதிக்க மாட்டான். இறைவன் நமக்கு இஸ்லாத்தின் உண்மைகளை நிலைநாட்டக்கூடிய நூற்றுக்கணக்கான மறுக்க முடியாத ஆதாரங்களை அருளியிருக்கும்போது நமது எதிரிகளின் கையோ வெறுமையாக உள்ளது. மேலும் இறைவன் நம்மை உண்மையின்பால் நிலைநாட்டி உள்ளான். ஆனால் மற்றவர்களோ பொய்யையே சார்ந்துள்ளனர். ஏக இறைவனது மகிமையை வெளிப்படுத்தும்படியாக செயல்படும் ஒரு நேர்மையாளரின் உண்மையான உற்சாகத்தை போன்றதொரு உற்சாகத்தை அவர்களால் சிறிதும் கற்பனை கூட செய்ய இயலாது.


இருந்த போதும், தளர்வில்லாத முயற்சி என்பது எந்த அளவுக்கு வலுவுள்ளதெனில் பொய்யை சார்ந்து இருப்பவர்கள் கூட சில நேரங்களில் பலன்களை அறுவடை செய்யக்கூடும். அவர்களது முயற்சிகளும் ஒரு திருடனின் விடாமுயற்சியினால் ஏற்படும் பலன்களைப் போல எப்போதாவது பலன் தரும். உதாரணத்திற்கு, வெளிப்படையாக காணும் போதே கிறிஸ்தவர்களின் கொள்கைகள் அடிப்படையில் அபத்தமானதாக இருப்பினும், அவர்களது மிஷனரிகளின் தொடர் விடாமுயற்சியின் பலனாக அவர்களது மார்க்கம் வேகமாக பிரபலமாகிறது. எந்த அளவிற்கு எனில் வருடம்தோறும், 4000 முதல் 8000 மக்கள் கிறிஸ்தவ மதத்தை தழுவுவதாக அவர்கள் பெருமையுடன் அறிக்கை வெளியிடுகின்றனர். சுருங்கக்கூறின் கல்கத்தாவை சேர்ந்த Fr. ஹேக்கர் கொடுத்துள்ள சமீப கால மதிப்பீட்டின் படி கிறிஸ்தவ மத மாற்றங்களின் எண்ணிக்கை கவலை அளிக்கக் கூடியதாக உள்ளது. Fr. ஹேக்கரின் கூற்றின் படி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை சுமார் 27 ஆயிரம் மட்டுமே இருந்தது. ஆயினும் தற்போது இந்த எண்ணிக்கை 5 இலட்சமாக உயர்ந்துள்ளது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இஸ்லாமிய பெரியோர்களே! வழிகேட்டின் பால் இதை விட பெரியதொரு வளர்ச்சிக்காக நீங்கள் காத்திருக்க வேண்டுமா? ஒரு காலம் இருந்தது. அப்போது இஸ்லாத்தின் நிலை கீழ்க்கண்ட திருக்குர்ஆன் வசனத்தையே உயிரோட்டமாக வெளிக்காட்டுவதாக இருந்தது.

ஆனால் இன்றைய நிலைமை பாருங்கள். இந்த மோசமான நிலைமையை கண்டு உங்கள் இதயங்களில் இரத்தம் வழியவில்லையா? துக்கம் உங்களை ஆட்கொள்ளவில்லையா? அறிவிலும் ஞானத்திலும் சிறந்தோரே! மார்க்கத்தின்பால் உள்ள அறியாமை காரணமாக தோன்றும் சீர்கேடுகளை களைவதற்கு மார்க்க அறிவை பரப்புவதே சரியான தீர்வு என்பதை புரிந்து கொள்வது மிகவும் கடினமான விஷயம் அல்ல. இந்த நோக்கத்தினை மனதில் கொண்டே பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலை எழுதியுள்ளேன்.

இந்நூலில் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத பல வாதங்களில் இஸ்லாம் இறுதியான வெற்றியை பெறும்படியாக இஸ்லாத்தின் உண்மைகளை சந்தேகங்-களுக்கு இடமின்றி தெளிவாக எடுத்துக் காட்டியும் உள்ளேன்.

இந்நூலை வெளியிடுவதற்கு தேவைப்படும் உதவிகளை அளிக்கும்படியாக முஸ்லிம்களுக்கு நான் கோரிக்கை விடுப்பது முஸ்லிம்களின் நன்மைக்காகவே என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு நூலை வெளியிடுவதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவாகும்போது ஒரு புத்தகத்தை உருவாக்குவதற்கான செலவிலிருந்து பாதிக்கும் குறைவாகவே அப்புத்தகத்தின் விலையாக நிர்ணயிக்கும் போது, அதாவது ரூபாய் 25 இல் இருந்து ரூபாய் பத்துக்கு கொடுக்கும்போது, முஸ்லிம்கள் இந்நூலை எளிதாக பெற்றுக் கொள்ள இயலும் என்ற நிலையில், தர்ம சிந்தனையுடைய முஸ்லிம்களின் உதவி மற்றும் ஒத்துழைப்பின்றி இந்நூலை வெளியிட இயலாது என்பது தெளிவாக தெரியக்கூடிய விஷயம்தான். இந்நூல் அதன் அனைத்து பாகங்களுமே அச்சடிக்கப்பட்டு வெளியிடப்படும்போது நாங்கள் வாங்கிக் கொள்கின்றோம் என்று எனது கோரிக்கைகளுக்கு பதில் அளிப்பவர்களை நினைத்து நான் பரிதாபப்படுகின்றேன். இது ஒரு வகையான வியாபார விஷயம் அல்ல என்பதை அவர்கள் தம் மனதிற் கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் வழியில் உதவியாக இருக்கும் எனும் ஒரு நோக்கத்தை தவிர அவர்களது பணத்தின் மீது எனக்கு எந்த ஆர்வமும் இல்லை. தேவை ஏற்பட்டுள்ள இந்த நேரமே உதவி செய்ய பொருத்தமான நேரமாகும். எதிர்காலத்தில் உதவி செய்ய முன் வரலாம்




என்பது ஏற்கனவே குணமாகி விட்ட நோயாளிக்கு மருந்து அளிப்பது போல் ஆகி விடும் மேலும் வெகுமதி பெறத் தகுதியற்றதாகி விடும். மக்களின் இதயங்களினின்றும் மார்க்கத்தின்பால் உள்ள நேசம் எவ்வளவு மறைந்து விட்டது என்பது ஆச்சரியம் அளிக்கிறது. தங்களது சொந்த மரியாதைக்காகவும் கௌரவத்திற்காகவும் மறுபரிசீலனை இன்றி ஆயிரக்கணக்கில் செலவு செய்யும்போது, இந்த தற்காலிகமான வாழ்வின் உயர்வான நோக்கமாகிய மார்க்கத்-திற்காக உதவி செய்வதிலிருந்து தப்பிப்பதற்கு எல்லா விதமாக சாக்குப்போக்குகளையும் கூற ஆரம்பிக்கின்றனர்.

இவர்கள், இறைவனையும் மறுமையையும் நாங்கள் விசுவாசிக்கின்றோம் என வெளிப்படையாக கூறுகின்றனர். ஆனால் நடைமுறையில் உண்மையாகவே அவர்கள் இறைவனையோ மறுமையையோ விசுவாசிக்கவில்லை. இறைவன் அருளிய ஆசையிலிருந்து அவர்கள் தங்களது சொந்த பெருமையையும் அபிலாசைகளையும் அடைய ஒரு வருடத்திற்கு எவ்வளவு செலவு செய்கின்றனர் என்பதையும் மனிதகுலத்திற்கு நிலையான வாழ்நாள் முழுவதும் பயன் அளிக்கக்கூடிய இறைவன் சார்ந்த விஷயங்களுக்கு எவ்வளவு செலவு செய்கின்றனர் என்பதையும் ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்களின் இரட்டை நிலை அவர்களை

வெட்கப்பட செய்யும். ஆனால் இவ்வாறு சிந்திப்பதற்கு யார் தான் மெனக்கெடுவர், அவர்களது இதயங்களில் சூழ்ந்துள்ள திரைகளை யார் தான் அப்புறப்படுத்துவார்.

وَ مَنۡ یُّضۡلِلِ اللّٰہُ فَمَا لَہٗ مِنۡ ہَادٍ

"அல்லாஹ் எவரை அழித்து விட விரும்புகிறனோ அவருக்கு நேர்வழி காட்ட எவரும் இல்லை." (13:34).

அதீத உலகப் பற்றுள்ள இத்தகு கஞ்சர்களின் தன்மையை மனதில் கொண்டே, நிச்சயமாக இஸ்லாத்தின் பால் நேசம் கொண்டவர்கள் என்று கருதக்கூடிய, என் மீது அன்பு கொண்டுள்ள, சில நண்பர்கள் மனிதாபிமான முறையில், வெளியிடுவதற்கு அதிக பணம் தேவைப்படுகின்ற இத்தகு பெரிய புத்தகத்தை வெளியிட முயற்சிப்பது ஒருவேளை சிறந்த யோசனை இல்லை என எனக்கு ஆலோசனை தருகின்றனர். அவர்களுக்கு நான் பணிவுடன் கூறுவது யாதெனில் நூற்றுக்கணக்கான உண்மைகள் மற்றும் அடிப்படை மார்க்கக் கோட்பாடுகளால் இந்நூலின் அளவு பெரிதாகும்போது அவைகளை பதியாமல் விட்டு விடுவது என்பது இந்நூலின் நோக்கத்தையே தோற்கடித்தது போல் ஆகி விடும். தேவையான பணத்தை திரட்டுவது எப்படி எனும் கேள்வியைப் பொருத்தமட்டில் எனது நண்பர்கள் எனக்கு எச்சரிக்கை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். நான் இரும்பு பெட்டிகளை பூட்டி அதன் சாவிகளை தன் பையினுள் தைத்து வைத்துக் கொள்ளக்கூடிய கஞ்சத்தனமானவர்களைக் காட்டிலும் சர்வ வல்லமையுள்ள பெருந்தன்மையான இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ளேன்.

اَلَمۡ تَعۡلَمۡ اَنَّ اللّٰہَ عَلٰی کُلِّ شَیۡءٍ قَدِیۡرٌ

"தான் நாடும் அனைத்தையும் செய்து முடிக்க அல்லாஹ் முழுமையான ஆற்றல் பெற்றவன் ஆவான் என்பது உமக்குத் தெரியாதா?" (2:107).

پناہم آں توانائیست ہر آن    ز بخل ناتوانانم مترساں**

"சர்வ வல்லவனான இறைவனது நிலையான பாதுகாப்பினுள் நான் இருக்கின்றேன். குறைபாடு உள்ளவர்களின் கஞ்சத்தனம் குறித்து என்னை பயம் காட்டாதீர்."

(தொடரும்...)


## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நன்மை செய்வதில் போதுமென்ற மனமும், சோம்பேறித்தனமும், பலவீனமும் இருக்கக் கூடாது. ஆனால், அத்துடன் அதில் வெளி வேஷம் இருக்கக் கூடாது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். பல மக்களும் தாம் செய்கின்ற பணிகளை வெளிப்படுத்திக் காட்ட விரும்புகின்றனர். அதாவது, அவர்கள் செய்யும் பணிகளைப் பலமுறை பாராட்டிக் கூற வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், இது ஒரு நோயாகும். அது மிகவும் மறைவாக இருக்கின்றது. அதற்கு மிகவும் அபாயகரமான விளைவுகள் வெளிப்படுகின்றன...... அறிவுரை செய்பவர்களிடமும் இந்த நோய் இருக்கின்றது. இதன் விளைவாக அவர்களது உள்ளங்களில் துருப்பிடித்து விடுகின்றது. இறைவனின் நெருக்கம் கிடைக்காமல் போய் விடும்...... பல அமைப்புகளும் தாம் செய்கின்ற பணிகளைப் பிறர் புகழ்ந்து பாராட்ட வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் பெரிய பணியைச் செய்துள்ளனர் என்று மக்கள் கூற வேண்டும் என்பதற்காக அவர்கள் தமது பணிகளைப் பெரிதாக விளம்பரப்படுத்திக் காட்டுகின்றனர். ஆனால், அவ்வாறு செய்பவர்கள் எதையும் செய்யவில்லை. மற்றவர்களைப் பணி செய்யத் தூண்டுவதற்காகவும் ஆர்வமூட்டுவதற்காகவும் தமது பணிகளை வெளிப்படுத்திக் காட்டுவது வேறு விஷயமாகும். ஆனால், மற்றவர்களது நாவிலிருந்து அவர்கள் பெரிய பணியைச் செய்துள்ளார்கள் என்று அவர்கள் கூறுவதைக் கேட்க வேண்டும் என்பதற்காக பணி செய்யக் கூடாது. எனவே, நம்பிக்கை கொண்டவர் வெளி வேஷத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும். வெளி வேஷத்தினால் இறைவனின் நெருக்கம் கிடைக்காமல் போய் விடும்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 5 பக்கம் 526-527 அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 1 ஏப்ரல் 2016 பக்கம் 11)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

## (மத நல்லிணக்கம், மார்க்க சுதந்திரம் குறித்து நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் முன்மாதிரி)



மதிப்பிற்குரிய முஹம்மத் இனாம் கவ்ரி சாஹிப் (நாஸிர் ஆலா)

தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகிறார்கள்: “பெண்கள் பைஅத்திற்காக வருகை தந்தபோது ஹிந்தாவும் முக்காடு அணிந்து கொண்டு அவர்களுடன் வந்தார். மேலும் பைஅத்தும் செய்து விட்டார். நாங்கள் இணைவைக்க மாட்டோம் என்ற வாசகத்தை அடைந்ததும் அவர் இயல்பாகவே மிக அதிகமாக கோபம் அடையக் கூடியவர். அதன் காரணமாக அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் தற்போது இணைவைப்போமா? நீங்கள் தனியாக இருந்தீர்கள். நாங்கள் அனைவரும் முழு சக்தியுடனும் ஆற்றலுடனும் உங்களை எதிர்த்தோம். எங்களுடைய இறைவன் உண்மையானவனாக இருந்திருந்தால் நீங்கள் எவ்வாறு வெற்றி பெற்றிருப்பீர்கள்? நிச்சயம் அது ஒன்றுமற்றதாக நிரூபணம் ஆகி விட்டது. நாங்கள் தோல்வியை அடைந்து விட்டோம். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது ஹிந்தாவா என்று கேட்டார்கள்? அன்னாரின் உறவினர் என்ற அடிப்படையில் அவருடைய குரலை அன்னார் அறிந்திருந்தார்கள். ஹிந்தா கூறினார்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தற்போது முஸ்லிமாகி விட்டேன். தற்போது உங்களுக்கு என்னைக் கொலை செய்வதற்கான உரிமை இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்தவாறு ஆமாம்; தற்போது உன் மீது எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லை என்று கூறினார்கள். ஆக, எந்த சமுதாயம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து இறைவணையும் ஒன்றிணைத்து ஒரே இறைவனாக உருவாக்கி விட்டார்கள் என்று கருதினார்களோ அவர்களிடத்தில் ஹிந்தா போன்ற வீரமான பெண்ணும் கூட இறைவன் ஒருவன்தான் என்று கூறும் அளவிற்கு ஒரு மாற்றம் ஏற்பட்டு விட்டது. (அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 14,15)

மார்க்க நல்லிணக்கம் மற்றும் மனசாட்சி சுதந்திரம் தொடர்பாக திருக்குர்ஆனின் போதனைகள் மற்றும் ஹஸ்ரத் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்)' அவர்களின் அழகிய முன்மாதிரியை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் இக்காலத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிழலாக சாயலாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் அந்தஸ்தில் குறிப்பாக இந்தியாவில் அனுப்பியுள்ளான். இதற்கான ஒரு மிகப்பெரிய காரணம் என்னவென்றால் இந்தியா பல்வேறு சமுதாயங்கள் மற்றும் மார்க்கத்தினர்கள் வாழும் இடமாக இருக்கின்றது. பல்வேறு நிறம், இனம், மொழிகள் மற்றும் மார்க்கத்தைப் பின்பற்றக்கூடிய நாடாகவும் இருக்கின்றது. எனவே எல்லாம் வல்ல அல்லாஹ் அழகிய மற்றும் சமாதானத்தை வழங்கக்கூடிய இஸ்லாமிய போதனைகளைப் பரப்புவதற்காக இந்த நாட்டை மையமாக ஆக்கியுள்ளான். இந்த நாட்டிலிருந்துதான் அந்த ஒளியானது இன்று உலகின்



220 நாடுகளில் பரவியுள்ளது. இந்த இந்திய நாட்டில் பிற மார்க்கங்களைப் பின்பற்றக் கூடியவர் அல்லாமல் இந்து மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இரண்டு பெரிய சமுதாயங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கிடையில் ஒற்றுமை ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கங்களின் போதனை -களை வழங்கியவாறு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானீ (அலை) அவர்கள் தம்முடைய வாழ்நாளின் கடைசி நாட்களில் ‘சமாதானத் தூது’ என்ற பெயரில் ஒரு புத்தகத்தை எழுதினார்கள். அதிலிருந்து சில மேற்கோள்களை நான் எடுத்து வைக்கின்றேன்:

அன்னார் கூறுகிறார்கள்: நாம் அனைவரும் இந்துக்களாக இருந்தாலும் முஸ்லிம்களாக இருந்தாலும் நம்மிடையே நிலவும் நூற்றுக்கணக்கான வேறுபாடுகள் இருந்தும் நாம் இவ்வுலகைப் படைத்தவன் மற்றும் அதன் அதிபதியான அந்த இறைவன் மீது நம்பிக்கை கொள்வதில்

ஒன்றுபட்டிருக்கின்றோம். மேலும் அவ்வாறே நாம் அனைவரும் மனிதன் என்ற பெயரிலும் ஒன்றுபட்டு இருக்கின்றோம். மேலும் அவ்வாறே நாம் அனைவரும் ஒரே நாட்டில் வாழ்பவர்களாக இருக்கின்ற காரணத்தால் ஒருவருக்கொருவர் அண்டையர் -களாக இருக்கின்றோம். எனவே நமது கடமை என்னவென்றால் நாம் தூய உள்ளத்துடனும் நல்ல எண்ணத்துடனும் ஒருவருக்கொருவர் நண்பர்களாக ஆகி மார்க்கம் மற்றும் பௌதிக இன்னல்களில் ஒருவருக்கொருவர் அனுதாபத்தோடு நடந்து கொள்ள வேண்டும். மேலும் ஒருவர் மற்றவருடைய உடல் அங்கமாக மாறி விடும் அளவிற்கு அனுதாபத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எந்த மார்க்கத்தில் பொதுவான அனுதாபம் பற்றிய போதனை இல்லையோ அந்த மார்க்கம் ஒரு மார்க்கமே அல்ல. மேலும் எந்த மனிதனிடம் அனுதாபம் என்ற பண்பு இல்லையோ அவன் மனிதனே அல்ல. நம் இறைவன் எந்த ஒரு சமுதாயத்திடமும் பாரபட்சம் காட்டுவதில்லை. உதாரணமாக மனிதனின் என்னென்ன ஆற்றல்களும் திறமைகளும் ஆரியர்களின் பழங்கால சமுதாயங்களுக்கு வழங்கப்பட்டனவோ அந்த எல்லா ஆற்றல்களும் திறமைகளும் அரேபியர்கள், பாரசீகர்கள் சிரியாவை சேர்ந்தவர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் ஆகிய சமுதாயங்களுக்கும் வழங்கப் -பட்டுள்ளன. இறைவனின் பூமி அனைவருக்கும் விரிப்பாகப் பயன்படுகிறது. அவனது சூரியன், சந்திரன், மற்றும் பல நட்சத்திரங்களும் அனைவருக்கும் ஒளிதரும் விளக்காகப் பயன்படுகின்றன. மேலும் பிற தொண்டுகளையும் புரிகின்றன. அவனால் படைக்கப்பட்ட அடிப்படை காரணிகளாகிய காற்று, நீர், நெருப்பு, மற்றும் மண் அதே போன்று அவனால் படைக்கப்பட்ட பிற பொருட்களான தானியங்கள் கனிவகைகள் மற்றும் மூலிகைகள் ஆகியவற்றிலிருந்து அனைத்து சமுதாயங்களும் பயனடைகின்றன. ஆக இறைவனின் இந்தப் பண்புகள் நாமும் மனித இனத்துடன் மனிதநேயத்தோடும் நன்னடத்தையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் குறுகிய மனம் உள்ளவர்களாகவும் தைரியமற்றவர்களாகவும் ஆகி விடக் கூடாது என்ற பாடத்தையும் புகட்டுகின்றன." (சமாதானத் தூது பக்கம் 4,5)



மேலும் பரஸ்பர ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் அருள்களின் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகிறார்கள்: "ஒற்றுமை எத்தகையது என்றால் வேறு எந்த வகையிலும் தீர்க்க முடியாத துன்பங்களும் வேறு எந்தத் திட்டத்தினாலும் தீர்வு காண முடியாத பிரச்சனைகளும் ஒற்றுமையினால் தீர்வு காண முடியும் என்பது எவருக்கும் மறைமுகமானது அல்ல. எனவே ஒற்றுமையின் அருட்களிலிருந்து தன்னை விலக்கி வைப்பது அறிவுள்ளவரது செயல் அல்ல. இந்துக்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டின் எப்படிப்பட்ட சமுதாயங்கள் என்றால் உதாரணமாக இந்துக்கள் ஒன்றிணைந்து முஸ்லிம்களை இந்த நாட்டில் இருந்து வெளியேற்றி விடுவார்கள் என்பதையோ அல்லது முஸ்லிம்கள் ஒன்றிணைந்து இந்துக்களை நாடு கடத்தி விடுவார்கள் என்பதையோ நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாகும். மாறாக இன்னும் கூறுவதென்றால் தற்போது இந்து முஸ்லிம்களின் இணைப்பு பிரிக்க முடியாத ஒன்றாகும். ஒருவர் மீது ஏதும் அழிவு வந்து விட்டால் மற்றவரும் அதில் இணைந்து விடுவார்..... உங்களுடைய இரு சமுதாயங்களில் எவர் மற்ற சமுதாயத்திற்கு அழிவை ஏற்படுத்தும் எண்ணம் உடையவராக இருப்பாரோ அவர் தான் அமர்ந்திருக்கும் மரத்தின் கிளையை தாமே வெட்டுபவர் போன்றவராவார். நீங்கள் அனைவரும் இறைவன் அருளால் கல்வி அறிவு பெற்றவர்களாகவும் விளங்குகின்றீர்கள். தற்போது வெறுப்பினை விட்டு விட்டு நேசிப்பதில் முன்னேறுவது அழகாகும். மேலும் இறக்கமின்மையை விட்டு விட்டு அனுதாபத்தைக் காட்டுவது தங்களுடைய அறிவுடைமைக்கு உகந்ததாகும். (சமாதானத் தூது பக்கம்10,11)

பல்வேறு மார்க்கங்களில் வெவ்வேறு கொள்கைக் கோட்பாடுகள் மற்றும் கருத்துகள் இருக்கலாம். அதைப் பின்பற்றக் கூடிய ஒவ்வொருவரும் தத்தமது புரிதலுக்கு ஏற்ப அவற்றை ஏற்றுக் கொண்டு பின்பற்றுவதுடன், பகுத்தறிவு மற்றும் நேர்மையான வாதங்களுடன் மற்றவர்களையும் நம்ப வைக்கிறார்கள். இதுவே மார்க்க சுதந்திரத்தின் அர்த்தமும் கருத்தும் ஆகும். ஆனால் இதற்கு நேர்மாற்றமாக, எவராவது பிற மதத் தலைவர்களையும் அல்லது அவர்களின் நம்பிக்கைக்குரிய வேதங்களையும் அவமதித்து மறுக்க முயற்சிப்பாரேயானால் அதுவே குழப்பத்திற்கும் போருக்கும் வழிவகுக்கக் கூடியதாக அமையும். அவ்வாறு இல்லை எனில், சின்னஞ்சிறு வேறுபாடுகள் பரஸ்பர அமைதி மற்றும் ஒற்றுமைக்குத் தடையாக இருக்க முடியாது.

இந்த மையக்கருத்தை மேலும் விவரித்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "பல்வேறு சமுதாயங்களின் நபிமார்களையும் இறைத்தூதர்களையும் கண்ணியக்குறைவாக குறிப்பிடுவதும் அவர்களைப் பழித்துரைப்பதும் எத்தகைய ஒரு விஷம் என்றால் அது இறுதியில் உடலை மட்டும் அழித்து விடுவதில்லை. மாறாக ஆன்மாவையும் அழித்து மார்க்கம் மற்றும் உலகம் ஆகிய இரண்டையும் அழித்து விடுகின்றது என்பதை பழைய அனுபவமும் மீண்டும் மீண்டும் வரும் சோதனைகளும் நிரூபித்துக் காட்டி விட்டன. ஒரு நாட்டில் வாழும் மக்கள் ஒருவர் மற்றவரின் மார்க்க வழிகாட்டியைக் குறை கூறுவதிலும் அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட அந்தஸ்தை சீர்குலைப்பதிலும் ஈடுபட்டால் அந்நாடு நிம்மதியாக வாழ முடியாது. மேலும் எந்த சமுதாயங்களில் ஒரு சமுதாயத்தவர் பிற சமுதாயத்தவரின் நபி, ரிஷி மற்றும் அவதாரத்தை தீயவர்களாகவும் தீயவார்த்தைகளாலும்

நினைவு கூர்வார்களோ அந்த சமுதாயங்களுக்கிடையே ஒருபோதும் உண்மையான ஒற்றுமை நிலவ முடியாது.... மேலும் நாங்கள் மற்ற சமுதாயங்களின் நபிமார்களைக் குறித்து ஒருபோதும் தீய வார்த்தைகளில் பேசியதில்லை. இவ்வுலகில் பல்வேறு சமுதாயங்களுக்காக அனுப்பப்பட்ட நபிமார்களைக் கோடிக்கணக்கான மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். மேலும் உலகின் ஏதோ ஒரு பகுதியில் அவர்களின் நேசம் மற்றும் மகத்துவம் போற்றப்படுகிறது. இந்த நேசம் மற்றும் நம்பிக்கையில் ஒரு நீண்ட காலம் கடந்து விட்டதே அவர்களின் உண்மைக்கு போதுமான சான்றாகும் என்பதே எங்கள் கொள்கையாகும். ஏனென்றால் அவர்கள் இறைவன் புறமிருந்து வந்திருக்கவில்லை என்றால் அவர்களின் புகழ் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் பரவி இருக்காது." (சமாதானத் தூது பக்கம் 22,23)

இஸ்லாத்தின் ஸ்தாபகர் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் மார்க்க சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் தொடர்பாக என்ன போதனைகளை வழங்கியுள்ளார்களோ அதற்கு தம்முடைய அழகிய முன்மாதிரி மூலம் செயல் வடிவிலும் ஆன சான்றையும் அளித்துள்ளார்கள். மேலும் இக்காலத்தில் அன்னாருடைய உண்மை அடியாரான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானீ (அலை) அவர்கள் அந்த போதனைகள் மற்றும் அழகிய முன்மாதிரியை மீண்டும் உயிர்ப்பித்துக் காண்பித்துள்ளார்கள். அதன் பக்கம் அனைத்து உலகையும் நாம் அழைக்கின்றோம். ஏனென்றால் இன்று மனிதநேயத்திற்கு ஏற்பட்ட அபாயம் ஜாதி மத இனம் மற்றும் நிறத்தின் வேறுபாடுகள் மற்றும் பாகுபாடுகளின் காரணத்தினால் மட்டுமே நிலவுகிறது. மேலும் மார்க்க வேற்றுமையின் விளைவு ஒரு மனிதனை மனிதநேயத்தில் இருந்து வீழ்த்தி கொலை மற்றும் அழிவுக்கான கட்டத்தை எட்டியுள்ளது. மனித பயங்கரவாதம் மற்றும் தற்கொலைத் தாக்குதல் -களுக்கு மேலதிகமாக, மிகவும் கொடிய ஆயுதங்கள் மற்றும் ட்ரோன் தாக்குதல்களின் விளைவாக குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் மற்றும் அப்பாவி உயிர்கள் படுகொலை செய்யப்படுகின்ற சம்பவங்களை நாம் கேட்கவும் பார்க்கவும் செய்கின்றோம்.

ஐந்தாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் சய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுஃல்லாஹ்) அவர்கள் மத நல்லிணக்கம் மற்றும் கருத்து சுதந்திரம் தொடர்பாக இஸ்லாமிய போதனைகள் மற்றும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பிரகாசிக்கச் செய்தவாறு கூறுகின்றார்கள்:

"திருக்குர்ஆனின் எண்ணற்ற இடங்களில் இஸ்லாத்தின் இந்த அழகிய போதனைகள் காணக் கிடைக்கின்றன. அதில் முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் அவர்களுடைய உரிமையைக் கவனத்தில் கொள்ளுதல் அவர்களுடன் நீதமான முறையில் நடந்து கொள்ளுதல் அவர்களின் மார்க்கத்தில் எந்த விதமான நிர்பந்தமும் செய்யக் கூடாது. மார்க்கம் தொடர்பாக எந்த ஒரு கடுமையும் மேற்கொள்ளக் கூடாது போன்றவை. இதுபோன்ற எண்ணற்ற கட்டளைகள் நமக்காக மட்டுமல்லாமல் முஸ்லிமல்லாதவர்களுக்காகவும் இருக்கின்றது.... மனித குலத்தில் மிகவும் இரக்கமுள்ள, கருணையுள்ள மற்றும் மனித உரிமைகளின் சிறந்த பாதுகாவலருமாகத் திகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலை எவ்வாறாக இருந்தது என்று சொன்னால் போர்க்காலங்களில் கூட, எதிரிக்கு எளிமையான வசதியை ஏற்படுத்தித் தரக்கூடிய எந்த வாய்ப்பையும் அன்னார் ஒருபோதும் கையில் இருந்து நழுவவிட்டதில்லை. அன்னாரின் வாழ்வின் ஒவ்வொரு செயலும் ஒவ்வோர் அசைவும் அன்னாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு கணமும் அன்னார் கருணையின் முழு உருவமாகவே திகழ்ந்தார்கள் என்பதற்கான சான்றாகும். மேலும் அன்னாரின் மார்பில் எப்படிப்பட்ட உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது என்றால் அதை விட வேறு எந்த உள்ளமும் கருணையின் அந்த உயர் தரம் மற்றும் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு அந்த உள்ளம் இருந்தது. சமாதானத்திலும், போரிலும், வீட்டிலும், வெளியிலும், அன்றாட விஷயத்திலும், மற்ற மார்க்கத்தினர்களுடன் தொடர்புடைய விஷயங்களிலும், பிற மார்க்கங்களுடன் செய்த ஒப்பந்தத்திலும் அன்னார் கருணையின் முழு உருவமாகவே திகழ்ந்தார்கள். அன்னார் மத நல்லிணக்கம் மற்றும் மார்க்க சுதந்திரத்தின் உயர் தரத்திலான உதாரணத்தை நிலைபெறச் செய்து விட்டார்கள். அதன் பிறகு சிறந்த மாபெரும் வெற்றியாளர் என்ற நிலையில் மக்காவில் நுழைந்து எங்கு வெற்றிக் கொள்ளப்பட்ட சமுதாயத்தினரிடம் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொண்டார்களோ அங்கு மார்க்க சுதந்திரத்திற்கான முழுமை -யான உரிமையும் வழங்கி திருக்குர்ஆனின் இந்த கட்டளை -யின் உயரிய முன்னுதாரணத்தை நிலைபெறச் செய்தார்கள். அந்தக் கட்டளையானது لَآ إِكْرَاهَ فِى الدِّينِ மார்க்கத்தில் எவ்வித கட்டாயமும் (ஆகுமானதும்) இல்லை. (அல் பக்ரா 2:257)

மார்க்கம் உங்கள் உள்ளத்துடன் தொடர்புடையது என்னுடைய விருப்பம் என்னவென்றால் நீங்கள் உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு தன்னுடைய உலகம் மற்றும் மறுமையைச் சீர்செய்தவாறு தங்களுடைய பாவமன்னிப்பிற்கான காரணிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்பதே ஆகும். ஆனால் இதில் எந்த நிர்பந்தமும் இல்லை. அன்னாரின் வாழ்க்கை மத நல்லிணக்கம் மற்றும் மார்க்க சுதந்திரத்திற்கான இது போன்ற ஒளிரக்கூடிய எண்ணற்ற உதாரணங்களால் நிறைந்துள்ளது." (ஜுமுஆ உரை பிப்ரவரி 24, 2006)

எல்லாம் வல்ல அல்லாஹ் உலகின் அனைத்து ஆட்சியாளர்களுக்கும் குறிப்பாக முஸ்லிம் ஆட்சியாளர்கள் மற்றும் அமைப்புகளுக்கு இந்த இஸ்லாமிய போதனைகள் மற்றும் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களுடைய உயரிய முன்மாதிரிக்கு ஏற்ப மத நல்லிணக்கம் மற்றும் மார்க்க சுதந்திரத்தைப் பின்பற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

இறைவனால் படைக்கப்பட்ட அடிப்படை காரணிகளாகிய காற்று, நீர், நெருப்பு, மற்றும் மண், அதே போன்று அவனால் படைக்கப்பட்ட பிற பொருட்களான தானியங்கள் கனிவகைகள் மற்றும் மூலிகைகள் ஆகியவற்றிலிருந்து அனைத்து சமுதாயங்களும் பயனடைகின்றன. ஆக, இறைவனின் இந்தப் பண்புகள், நாமும் மனித இனத்துடன் மனிதநேயத்துடனும் நன்னடத்தையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், குறுகிய மனம் உள்ளவர்களாகவும் தைரியமற்றவர்களாகவும் ஆகி விடக் கூடாது என்ற பாடத்தையும் புகட்டுகின்றன.




**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்**

தஷஹ்ஹுத், தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பின்னர், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்வின் அருளால், இன்று இங்கிலாந்து வருடாந்திர வாக்கிஃபாத்தே-நவ் இஜ்திமா நடைபெற்று வருகிறது. இந்த இஜ்திமா எல்லா வகையிலும் அருளுக்குரியதாகவும், உங்களில் ஒவ்வொருவருக்கும் நீண்ட கால நன்மைகளுக்கான வழிமுறையாகவும் அமைய வேண்டும் என்று நான் நம்புகிறேன். அதற்காக துஆவும் செய்கிறேன்.

வாக்கிஃபாத்தே-நவ் என்பது, நீங்கள் பிறப்பதற்கு முன்பே உங்கள் பெற்றோர் உங்கள் வாழ்வை இறைமார்க்கத்தின் சேவைக்காக அர்ப்பணித்ததன் காரணமாக, இறைப்பற்றின் பாரம்பரியத்தில் பிறந்த அஹ்மதி பெண்களையும் சிறுமிகளையும் குறிக்கிறது. மேலும், நீங்கள் பருவ வயதை அடைந்தபோது, அந்த மகத்தான உறுதிமொழியை நீங்கள் ஒவ்வொருவரும் மீண்டும் உறுதிப்படுத்தி, அதை உங்களுடைய சொந்த உறுதிமொழியாக ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்.

ஆகவே, ஆரம்பத்திலேயே நான் தெளிவாகக் கூற விரும்புவது என்னவெனில், வாக்கிஃபாத்தே-நவ் உறுப்பினர்கள் ஜமாஅத்தின் ஒரு சிறிய அல்லது முக்கியத்துவமற்ற பிரிவல்ல. மாறாக, நீங்கள் ஒவ்வொருவரும் அளவிட முடியாத முக்கியத்துவமும் மதிப்பும் வாய்ந்தவர்கள். ஏனெனில், இந்தக் காலத்தில் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை நடைமுறைப் -படுத்துவதற்கும் அவற்றைப் பரப்புவதற்கும் தங்களது வாழ்வை அர்ப்பணித்த பெண்களும் சிறுமிகளும் நீங்கள் தான். எனவே, உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்கள் மார்க்கத்தின் மீதான உங்கள் கடமைகளும் பொறுப்புகளும், உயர்ந்து எழும் பெரும் அலைபோல் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கும்.




வாக்கிஃபாத்தே-நவ் உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து, உங்களைச் சுற்றியுள்ள உலகில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தவும், வருங்கால தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கவும் வல்ல ஆற்றலைப் பெற்றுள்ளீர்கள்.

கடந்த ஆண்டுகளில், நான் சந்தித்த வாக்கிஃபாத்தே-நவ் உறுப்பினர்களில் பலர் சிறு குழந்தைகளாக இருந்தார்கள். அப்போது அவர்களது வயதிற்கும் புரிதலுக்கும் ஏற்றவாறு நான் அவர்களிடம் உரையாற்றினேன். ஆனால் இன்று, அல்லாஹ்வின் அருளால், அப்போது நான் கண்ட அதே முகங்களில் பலர் முதிர்ந்த பெண்களாக என் முன் அமர்ந்திருக்கிறார்கள். உண்மையில், உங்களில் பலர் திருமணமாகி, வக்ஃபே-நவ் திட்டத்தில் இணைந்துள்ள குழந்தைகளுக்குத் தாய்மார்களாகவும் இருக்கிறீர்கள்.

இது அல்லாஹ்வின் அருளின் ஒரு வெளிப்பாடாக இருப்பதோடு மட்டுமல்லாமல், வக்ஃபே-நவ் திட்டத்தின்

ஒவ்வொரு உறுப்பினரும் தங்களது கடமைகளை ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டியதையும் நினைவூட்டுகிறது.

நீங்கள் ஒவ்வொரு படியாக முதிர்ச்சியை நோக்கி முன்னேறும்போது, உங்கள் மார்க்கத்துடனான தொடர்பும் அதே அளவில் ஆழமடைந்து முதிர்ச்சியடைய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அதேபோல், உங்கள் பொறுப்புகளின் பாரமும் அதிகரித்துக்கொண்டே செல்லும்.

குறிப்பாக, வயதில் மூத்தவர்களாகிய நீங்கள் அனைவரும் 13 அல்லது 14 வயதை எட்டியவர்களும் கூட தாங்கள் செய்துள்ள உறுதிமொழியின் உண்மையான பொருளையும் அதன் பரந்த பொறுப்பையும் குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும். உங்கள் பெற்றோர் உங்கள் வாழ்க்கையை அஹ்மதிய்யத்தின் சேவைக்காக அர்ப்பணித்தார்கள். பின்னர் நீங்கள் புரிந்துணரும் வயதையும் முதிர்ச்சியையும் அடைந்தபோது, உங்கள் சொந்த விருப்பத்தினால் அந்தப் புனிதமான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு மீண்டும் உறுதிப்படுத்தினீர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். எனவே, அந்த உறுதிமொழிக்கு நீங்கள் எவ்வாறு உண்மையுடன் மரியாதை செலுத்த முடியும் என்பதைப் பற்றி தீவிரமாக சிந்திக்க வேண்டும்.



அஹ்மதி பெண்களில் சிலர் மருத்துவம், பொறியியல், ஆசிரியப் பணி, சட்டம் போன்ற துறைகளில் உயர்கல்வி கற்று தொழில்முறைகளில் ஈடுபடுகின்றனர். அதேவேளை, பலர் திருமணத்திற்குப் பிறகு இல்லற வாழ்க்கையையே தேர்ந்தெடுக்கின்றனர். இவ்வாறு வீட்டிலேயே இருப்பவர்கள், தங்களுக்கு ஒரு தொழில் இல்லாத காரணத்தால் ஜமாஅத்திற்கு சேவை செய்ய முடியாது அல்லது தங்களது வக்ஃபின் பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது என்று ஒருபோதும் எண்ணக்கூடாது.

மாறாக, தங்களது பிள்ளைகளை நல்லொழுக்கம் உடையவர்களாகவும், அல்லாஹ்வின் மீதான ஆழ்ந்த அன்பைக் கொண்டவர்களாகவும் வளர்ப்பதும், தங்களது இல்லம் இஸ்லாமிய ஒளியைப் பரப்பும் ஒரு மையமாகத் திகழ்வதை உறுதி செய்வதும், ஒரு வக்ஃபே-நவ் உறுப்பினராக இருப்பதன் மையப்பொறுப்பாகும். உண்மையில், இது ஒவ்வொரு அஹ்மதி தாயின் அடிப்படைப் பொறுப்பாகும்.

ஆனால், தங்களது வாழ்வை இறைமார்க்கத்திற்காக அர்ப்பணித்தவர்களுக்கு, தங்கள் பிள்ளைகளின் ஒழுக்கப் பயிற்சிக்கும் ஆன்மிக வளர்ச்சிக்கும் உள்ள பொறுப்பு இன்னும் அதிகமாகும். உங்கள் பிள்ளைகள் எப்போதும் உங்களை உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, உங்கள் ஒவ்வொரு செயலும் நற்குணத்தையும் உண்மைத்தன்மையையும் பிரதிபலிக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பை எவ்வாறு ஏற்படுத்திக் கொள்வது, அது ஏன் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உங்கள் பிள்ளைகள் உங்களிடமிருந்தே கற்றுக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கத்தை நாடுவதின் மகத்தான மதிப்பையும், அவனிடம் நெருங்கிச் செல்லும் மக்களின் துஆக்களை அவன் எவ்வாறு அருளுடன் ஏற்றுக்கொள்கிறான் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு, உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு இறையச்சமிக்க முன்மாதிரியாக இருந்து, சர்வவல்லமை உள்ள அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதன் மூலம், உங்கள் வக்ஃபின் உண்மையான நோக்கத்தை நீங்கள் நிறைவேற்றுவீர்கள்.”

எனவே, எந்நேரமும் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ள, தூய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் போதனைகளையும் வாழ்க்கை முறையையும் உங்கள் வாழ்வில் வெளிப்படுத்த முயற்சி செய்யுங்கள். பல சந்தர்ப்பங்களில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், தமது வருகையின் நோக்கம் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் அசல் போதனைகளை மீண்டும் நிலைநாட்டுவதும், உலக மக்களை தூய நபி (ஸல்) அவர்களின் பூரணமான முன்மாதிரியைப் பின்பற்றத் தூண்டுவதுமாகும் என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

மேலும், அல்லாஹ் தம்மை இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக அனுப்பியுள்ளான் என்றும் அவர்கள் கூறினார்கள். முதலாவது, உலகில் அல்லாஹ்வின் ஏகத்துவக் கொள்கையை (தௌஹீத்) மீண்டும் நிலைநாட்டுவது. இரண்டாவது, தமது ஜமாஅத் அன்பையும் கருணையையும் நடைமுறையில் வெளிப்படுத்தி, மனிதகுலம் முழுவதும் ஆன்மிக இரட்சிப்பிற்கான பாதையை ஒளிரச் செய்வது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவனது மகிழ்ச்சியையும் அருளையும் எப்போதும் நாடுவதன் மூலம், அஹ்மதிகள் மற்றவர்களிலிருந்து தனித்துவமாகத் திகழ வேண்டும் என்பதே அவர்களின் ஆழ்ந்த விருப்பமாக இருந்தது.

தமது ஜமாஅத்திற்கான முன்மாதிரியாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தூய நபி (ஸல்) அவர்களின் நற்பேறு பெற்ற சஹாபிகளின் வாழ்க்கையை எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவுடன், தங்களிடமிருந்த எல்லா தீய பழக்கவழக்கங்களையும் ஒழுக்கக்கேடுகளையும் ஒரு கணம் கூட தயங்காமல் கைவிட்டார்கள். அவர்களுடைய உள்ளங்களில் ஒரு மாபெரும் ஆன்மிக எழுச்சி ஏற்பட்டது.

அதன் விளைவாக, அவர்கள் கருணை, கனிவு, இரக்கம் ஆகியவற்றின் உருவகமாக மாறினார்கள். அவர்களுடைய மனிதநேயம் மற்றும் பிறர்மீது கொண்ட அன்பிற்கு எல்லையே இருக்கவில்லை.

அதன் காரணமாக, அவர்கள் நற்செயல்களில் சிறந்து விளங்கியதோடு, அல்லாஹ்வின் நெருக்கத்தையும் பெற்றார்கள். மேலும், சமுதாயத்தில் ஒரு மாபெரும் ஆன்மிகப் புரட்சியை ஏற்படுத்தினார்கள். அதன் விளைவாக, காலப்போக்கில் இஸ்லாத்தின் போதனைகள் உலகின் பல பகுதிகளுக்குப் பரவின.

எனவே, வாக்கி.ஃ.பாத்தே-நவ் உறுப்பினர்களாகிய நீங்கள் உங்கள் கல்வித் தகுதி எதுவாக இருந்தாலும், உங்கள் உண்மையான மதிப்பையும் ஆற்றலையும் ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். உங்கள் இல்லங்களில் மிக உயர்ந்த ஒழுக்க நெறிகளையும் நற்குணங்களையும் நீங்கள் வெளிப்படுத்தினால், அது உங்கள் பிள்ளைகளிடம் உயர்ந்த பண்புகளையும் உறுதியான ஈமானையும் உருவாக்குவதற்கான வழிமுறை -யாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தப்லீக் பணிக்கான மிகவும் வலிமையான கருவியாகவும் அமையும்.

உங்கள் நற்குணம், நேர்மை, அடக்கம், உண்மையான பேச்சு ஆகியவை நல்ல மனப்பான்மை கொண்ட மக்களின் இதயங்களையும் சிந்தனைகளையும் உங்களிடம் ஈர்க்கும் ஒரு காந்தமாக அமையும். அதன் பின்னர், அவர்கள் நேர்வழியை அடைய வேண்டும் என்று நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது, அல்லாஹ் உங்கள் பிரார்த்தனைகளைச் செவிமடுத்து ஏற்றுக் கொள்வான்.

இவ்வாறு, இன்ஷா அல்லாஹ், பலர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கான நுழைவாயிலாக நீங்கள் மாறுவீர்கள். மேலும், உங்கள் சொற்கள், செயல்கள் மற்றும் உயர்ந்த நற்குணங்கள், இஸ்லாத்திற்கு எதிராக வழக்கமாக முன்வைக்கப்படும் பொய்யான குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் முற்றிலும் பயனற்றதாக மாற்றிவிடும்.

அதன் பிறகு, வாரத்திற்கு சில மணிநேரங்களை ஜமாஅத்திற்கோ அல்லது லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பிற்கோ ஒதுக்கினால் மட்டும், உங்கள் வக்.ஃ.ப் உறுதிமொழியின் கடமைகள் நிறைவேறிவிட்டன என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். மாறாக, வாக்கி.ஃ.பாத்தே-நவ் உறுப்பினர்களாகிய நீங்கள், உங்கள் இல்லங்கள் இஸ்லாமியப் பண்புகளின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், உங்கள் நண்பர்கள், பணியிடத் தோழிகள் மற்றும் உங்களுடைய தொடர்பு வட்டத்தில் உள்ள அனைவரிடமும் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைக்கும் பொறுப்பையும் நிறைவேற்ற வேண்டும்.

அதே போல், பள்ளி, கல்லூரி அல்லது பல்கலைக் -கழகங்களில் பயிலும் மாணவிகளும், தங்களுடைய ஒரே நோக்கம் கல்வி கற்பதுதான் என்று எண்ணக் கூடாது. நிச்சயமாக, கல்வி பெறுவது மிகவும் அவசியமானது. அது உங்கள் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு முக்கியமான வழியாகும். மேலும், அது ஜமாஅத்திற்கு திறமையாக சேவை செய்ய உங்களைத் தயார்படுத்த வேண்டும். அதோடு, அறிவு, தர்க்கம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் இஸ்லாத்தைப் பாதுகாத்து எடுத்துரைக்கும் தன்னம்பிக்கையையும் திறமையையும் உங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

மேலும், உங்கள் கல்வி முயற்சி, “இஸ்லாம் பெண்களின் கல்வியையும் முன்னேற்றத்தையும் மதிப்பதில்லை” என்று பொய்யாகக் கூறுபவர்களுக்கு ஒரு வலிமையான பதிலாக அமைய வேண்டும். எனவே, பள்ளி, கல்லூரி அல்லது பல்கலைக்கழக வாழ்க்கையில் முன்னேறும்போது, கல்வி என்பது வெறும் வேலை வாய்ப்பிற்கோ அல்லது பணம் சம்பாதிப்பதற்கோ மட்டுமே என்ற எண்ணம் உங்களிடம் இருக்கக்கூடாது.

மாறாக, அஹ்மதி மாணவிகள், தங்களுடைய உயர்ந்த நற்குணங்களாலும் உறுதியான ஒழுக்க மதிப்புகளாலும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பரப்புவதற்கான ஒரு வாய்ப்பாகவும் மேடையாகவும் தங்களுடைய கல்வியை கருத வேண்டும். உங்கள் நண்பர்கள், ஆசிரியர்கள் அல்லது உங்களுடன் தொடர்புடைய மற்றவர்களிடம் தப்லீக் செய்வதற்கான வழி வற்புறுத்தலோ கடுமையான வார்த்தைகளோ அல்ல. மாறாக, அன்பு, கருணை மற்றும் வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் உண்மை, நேர்மை, தயை, இறையச்சம் ஆகிய இஸ்லாமியப் பண்புகளை உங்கள் வாழ்க்கையில் நடைமுறையாக வெளிப்படுத்துவதன் மூலமே தப்லீக் செய்ய வேண்டும். இந்த உயர்ந்த தரத்தை நீங்கள் அடைந்தால் மட்டுமே, உங்கள் வக்.ஃ.பின் உண்மையான நோக்கத்தை நீங்கள் நிறைவேற்றியவர்கள் ஆவீர்கள்.

இது தொடர்பாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நமக்கு ஏராளமான அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். உதாரணமாக, தமது வாழ்க்கையை மார்க்கத்திற்காக அர்ப்பணித்த ஒருவர் ஒருபோதும் சோம்பேறித்தனத்திற்கோ அலட்சியத்திற்கோ ஆளாகக் கூடாது என்று அவர்கள் கூறினார்கள். மாறாக, அவர் சுறுசுறுப்பாகவும், திறமையுடனும், எப்போதும் பணியாற்றத் தயாராகவும் இருக்க வேண்டும்.

எனவே, வாக்கி.ஃ.பாத்தே-நவ் உறுப்பினர்களாகிய நீங்கள் அல்லாஹ் உங்களைச் சோம்பேறித்தனத்திலிருந்து பாதுகாத்து, தனிச்சிறப்புடனும், முழு அர்ப்பணிப்புடனும், திறமையுடனும் அவனது மார்க்கத்திற்குச் சேவை செய்யும் பாக்கியத்தை வழங்க வேண்டும் என்று தொடர்ந்து பிரார்த்தனை செய்யுங்கள்.

மேலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், தம்மை ஏற்றுக் கொண்டவர்களின் கடமை என்னவெனில், அல்லாஹ்வின் அடையாளங்கள் காலப்போக்கில் மறக்கப்படவோ மங்கிப்போகவோ இடமளிக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

ஆகவே, உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்: அல்லாஹ்வின் அடையாளங்கள் மறக்கப்படாமல் இருப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? அல்லாஹ் உயிருள்ள இறைவன் என்பதை நான் எவ்வாறு நிரூபிப்பேன்? இதற்கான பதில் மிகவும் எளிமையானது.

அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகும். ஐவேளைத் தொழுகைகளையும் அவற்றுக்குரிய நேரத்தில், ஆழ்ந்த பணிவுடனும் முழு அர்ப்பணிப்புடனும் தொழுவதன் மூலமே அது நிகழும். தொழுகைகளை வெறும் கடமையை முடிப்பதற்காகவோ அல்லது பெரியவர்களின் திருப்திக்-காகவோ அவசர அவசரமாக நிறைவேற்றிவிடக் கூடாது.

பத்து வயதிலிருந்து தொழுகை கட்டாயமாகிறது. உங்களில் பெரும்பாலோர் அந்த வயதை ஏற்கனவே கடந்துவிட்டீர்கள்.எனவே, உங்கள் தனிப்பட்ட வேலைகள், படிப்பு, பொழுதுபோக்கு அல்லது வேறு எந்தச் செயலாக இருந்தாலும், அவற்றைக் காட்டிலும் ஐவேளைத் தொழுகைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் உங்களுக்கு எந்த விதமான இழப்பும் ஏற்படாது. எந்த வாய்ப்பையும் நீங்கள் இழக்க மாட்டீர்கள். மாறாக,



உங்கள் தொழுகைகளே உங்கள் வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும், தொடர்ந்த வளத்திற்கும் காரணமாக அமையும். நீங்கள் தொழுகையை முறையாகக் கடைப்பிடித்தால், அல்லாஹ் உங்கள்மீது தனது அருளை பொழிவான். மேலும், உங்கள் எதிர்காலச் சந்ததியினரையும் பாதுகாப்பான்.

இது தொடர்பாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒருவர் இறையச்சமுள்ளவராக இருந்து, அல்லாஹ்வின் உரிமைகளையும் அவனுடைய வணக்கத்தையும் உண்மையுடன் நிறைவேற்றினால், அவருக்குத் தேவையான அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுப்பதை அல்லாஹ் தன் பொறுப்பாக ஏற்றுக் கொள்கிறான்.

எனவே, அல்லாஹ்வுக்கு முன்னுரிமை அளிப்பதாலும், அவனுக்காக உலக நலன்களில் சிலவற்றைத் தியாகம் செய்வதாலும் இழப்பு ஏற்படும் என்று ஒருபோதும் அஞ்சாதீர்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து, அவனுக்காகத் தியாகம் செய்பவர்களை அவன் ஒருபோதும் கைவிட மாட்டான். அவர்களுடைய வணக்கம் தூய்மையானதாக இருக்கும் வரை, அல்லாஹ் அவர்களை அளவற்ற அருளாலும் ஆசீர்வாதங்களாலும் நிரப்புவான். அதனால்தான், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், உங்கள் வணக்கம் முழுமையான தூய்மையுடனும், வெளிப்பகட்டோ பிறரைப் பிரமிக்கச் செய்யும் எண்ணமோ இல்லாமலும் இருக்க வேண்டும் என்று போதிக்கிறார்கள். அதே போல், தொழுகையை விரைவாக முடித்துவிட வேண்டிய சுமையாகவோ, விருப்பமில்லாத ஒரு வேலையாகவோ நாம் கருதக்கூடாது.அவ்வாறான வணக்கத்தில் அல்லாஹ்வுக்கு எந்த விருப்பமும் இல்லை.

மேலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், தினமும் திருக்குர்ஆனை ஓதுவதையும், அதன் உயர்ந்த மற்றும் உலகளாவிய போதனைகளின்படி வாழ முயற்சிப்பதையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்கள். நீங்கள் திருக்குர்ஆனின் அறிவைப் பெற்றால், அது உங்களை அர்த்தமுள்ள, பயனுள்ள வாழ்க்கை வாழச் செய்வதோடு மட்டுமல்லாமல், தப்லீக்கிற்கான எண்ணற்ற வாயில்களையும் திறந்துவிடும். ஏனெனில், அப்போது நீங்கள் அறிவு, தர்க்கம் மற்றும் உறுதியான ஆதாரங்களுடன் இஸ்லாத்தைப் பாதுகாத்து எடுத்துரைக்க முடியும்.

மேலும், திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி நீங்கள் வாழ்ந்தால், அது உங்கள் ஆன்மிக நிலையையும் ஒழுக்க நிலையையும் உயர்த்தி, அல்லாஹ்வின் நெருக்கத்தை உங்களுக்கு அளிப்பதோடு மட்டுமல்லாமல், உங்கள் உலகத் தேவைகளையும் நிறைவேற்றும் ஒரு வழியாகவும் அமையும்.அது உங்கள் வருங்காலச் சந்ததியினரின் ஒழுக்கப் பயிற்சிக்கும் வலுவான அடித்தளமாக இருக்கும்.

எனவே, அல்லாஹ்வை வழிபடுவதன் மூலமும், அவனது வார்த்தைகளான திருக்குர்ஆனை உறுதியாகப் பற்றிக்கொள்வதன் மூலமும், அவனுடன் உண்மையான விசுவாசமும் மாறாத பற்றுறுதியும் கொண்ட உறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் அனைவரும் தினமும் திருக்குர்ஆனை ஓத வேண்டும். அதன் மொழிபெயர்ப்பைப் படிக்க வேண்டும். மேலும், ஜமாஅத் வெளியிட்டுள்ள த.்ப்ஸீர்களைப் படிப்பதன் மூலம் அதன் ஆழமான கருத்துகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், இஸ்லாம் என்ன போதிக்கிறது என்பதை அறிந்து அதன்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். உங்கள் மார்க்கம் கோரும் எந்தத் தியாகத்திற்கும் எப்போதும் தயாராக இருங்கள்.

இது தொடர்பாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், தம்மைப் பின்பற்றுபவர்கள் தூய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தோழர்களைப் (சஹாபிகளைப்) போன்று உருவாக வேண்டும் என்பதே தமது விருப்பமும் நம்பிக்கையும் என்று தெரிவித்துள்ளார்கள்.

வரலாறு சாட்சியமாக இருப்பது என்னவெனில், தூய (ஸல்) அவர்களின் காலத்தில், சஹாபியாக்கள் தங்களது மார்க்கத்திற்காக மகத்தான தியாகங்களைச் செய்தார்கள். பலர் மனிதத்தன்மையற்ற கொடுமைகளையும் சித்திரவதை-களையும் பொறுமையுடன் சகித்தார்கள். சில முஸ்லிம் பெண்கள் இஸ்லாத்திற்காக தங்களது உயிரையே அர்ப்பணித்து, ஷஹீத்களின் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றார்கள்.

மேலும், தூய நபி (ஸல்) அவர்களின் சஹாபியாக்கள் பலர் போர்களிலும் பங்கேற்று, அபாரமான தைரியத்துடனும் அஞ்சாமையுடனும் போராடினார்கள். 'நாங்கள் பெண்கள்'

என்ற காரணத்தால் அவர்கள் எந்தவித விலக்கையும் கோரவில்லை. இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்கு தாங்கள் மிகவும் பலவீனமானவர்கள் என்றும் அவர்கள் எண்ணவில்லை. மாறாக, அவர்கள் இணையற்ற வீரத்தையும் தியாக உணர்வையும் வெளிப்படுத்தினார்கள்.

அதேபோல், இந்தக் காலத்திலும் அந்த ஆரம்பகால இறைநம்பிக்கையின் வீராங்கனைகளைப் போலவே அஹ்மதி பெண்களும் தங்களது மார்க்கத்திற்காக ஷஹீத்களாகி இருக்கிறார்கள். இன்னும் சிலர், தங்களது மத நம்பிக்கையின் காரணமாக மட்டுமே மிகவும் மனிதாபிமானமற்ற சூழ்நிலைகளில் சிறையில் அடைக்கப்பட்டு கடுமையான சோதனைகளைச் சந்தித்திருக்கிறார்கள்.

சில அஹ்மதி பெண்கள் எனக்கு எழுதி, “மார்க்கத்திற்காகத் தியாகம் செய்வதற்கோ அல்லது ஷஹீதின் அந்தஸ்தைப் பெறுவதற்கோ ஆண்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கின்றன” என்று வருத்தத்தையும் கவலையையும் வெளிப்படுத்துகிறார்கள். அதற்கு நான், நமது ஜமாஅத்தின் கண்ணியமான வரலாற்றை அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். ஏனெனில், அஹ்மதி பெண்கள் தொடர்ந்து மிக உயர்ந்த தியாகங்களைச் செய்து வந்திருக்கிறார்கள்.

உதாரணமாக, சமீபத்தில் பாகிஸ்தானில் ஒரு அஹ்மதி பெண்மீது அஹ்மதியல்லாத தீவிரவாதிகளால் முற்றிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அதன் விளைவாக, அவர் பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அந்த முழுக் காலத்திலும் அவர் அபாரமான பொறுமையையும் உறுதியான ஈமானையும் வெளிப்படுத்தினார். அவரது இறைநம்பிக்கை சிறிதளவும் பலவீனமடையவில்லை.

வாக்கி∴பாத்தே-நவ் உறுப்பினர்களாகிய நீங்கள் இப்படிப்பட்ட இறையச்சமிக்க பெண்களின் முன்மாதிரிகளைப் பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும். உங்கள் மார்க்கம் எத்தகைய தியாகத்தைக் கோரினாலும், அதைச் செய்ய எப்போதும் தயாராக இருங்கள். ஆனால், அதற்காக நீங்கள் அல்லாஹ்வை ஒருபோதும் மறந்து விடக் கூடாது. ஒவ்வொரு நாளும் அவனுடன் உங்கள் தொடர்பை மேலும் வலுப்படுத்துங்கள். திருக்குர்ஆனைப் படியுங்கள். அல்லாஹ்வின் கட்டளைகளையும் போதனைகளையும் ஆழமாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

அப்போதுதான், மார்க்கத்திற்காகத் தியாகம் செய்வதன் உண்மையான மதிப்பு, அதன் சாராம்சம், அதன் மகத்துவம் ஆகியவற்றை நீங்கள் உணர்வீர்கள். அதன் பிறகு, உங்கள் மார்க்கத்திற்காகத் தியாகம் செய்ய வேண்டிய வாய்ப்பு வரும்போது, நீங்கள் அதை இழப்பாகவோ வேதனையாகவோ கருதமாட்டீர்கள்.

மாறாக, உங்கள் இதயம் மகிழ்ச்சியால் நிரம்பும். தியாகங்களை நீங்கள் ஒரு சுமையாக அல்ல, மாறாக உங்கள் படைப்பாளருக்கு மேலும் நெருக்கமடைவதற்கான ஒரு அரிய பாக்கியமாகவும் சிறந்த வாய்ப்பாகவும் கருதுவீர்கள்.

மேலும், நீங்கள் உங்கள் மார்க்க அறிவை தொடர்ந்து அதிகரிப்பது மிகவும் இன்றியமையாததாகும். இஸ்லாத்திற்கும் அஹ்மதிய்யத்திற்கும் எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும்போது, சில அஹ்மதிகள் பதற்றமடைகிறார்கள் அல்லது அச்சமடைகிறார்கள். ஆனால், உங்கள் மார்க்கத்தைப் பற்றிய ஆழமான அறிவு உங்களுக்கு இருந்தால், நீங்கள் கவலையோ அச்சமோ அடைய மாட்டீர்கள். மாறாக, நமது மார்க்கத்திற்கும் நம்பிக்கைகளுக்கும் எதிராக முன்வைக்கப்படும் எந்தவொரு விமர்சனத்திற்கும் அல்லது பொய்யான குற்றச்சாட்டிற்கும் அறிவுப்பூர்வமாகவும் ஆதாரபூர்வமாகவும் பதிலளிக்கும் திறனை நீங்கள் பெற்றிருப்பீர்கள்.

எனவே, நீங்கள் திருக்குர்ஆனை ஆழமாகப் படிக்க வேண்டும். மேலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நூல்களையும் படிக்க




வேண்டும். அவற்றில் பல தற்போது ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அடிக்கடி கூறப்படுவது போல, ‘அறிவே ஆற்றல்’ ஆகும். எனவே, உங்களுக்கு மார்க்க அறிவு இருந்தால், அது உங்கள் ஈமானை உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இஸ்லாத்தின் எதிர்ப்பாளர்களுக்குத் தகுந்த பதிலளிக்கும் ஆற்றலையும் வழங்கும். மேலும், ஈமானில் பலவீனமாக இருப்பவர்களுக்கு வழிகாட்டவும் உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கும்.

அதே போல், ஜமாஅத்திற்குள் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிப்பவர்களைத் தடுக்கவும் அது உங்களுக்கு உதவும். எனவே, வக்∴பே-நவ் திட்டத்தின் உறுப்பினராகிய நீங்கள், இஸ்லாத்தின் ஆன்மிகப் படையில் பணியாற்றும் வீரர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் பணியாற்ற அழைக்கப்பட்டிருப்பது ஒரு உடல் ரீதியான போர்க்களத்தில் அல்ல. மாறாக, இது ஓர் ஆன்மிகப் போர்க்களம். அதில் நீங்கள் உங்களைத் தன்னார்வத்துடன் அர்ப்பணித்திருக்கிறீர்கள். அந்தப் போர்க்களத்தில் உங்கள் கடமை, மனிதகுலத்திற்கு இஸ்லாத்தின் போதனைகளின் உண்மையையும் மகத்துவத்தையும் எடுத்துரைத்து அவர்களுக்கு ஒளியூட்டுவதாகும்.

எனவே, மற்ற அஹ்மதிகளைவிட இன்னும் அதிகமாக, நீங்கள் இஸ்லாத்தையும், பரிசுத்த நபி (ஸல்) அவர்களின்

உன்னத குணநலன்களையும் பாதுகாப்பதில் முன்னணியில் நிற்க வேண்டும். அன்பு, கருணை, நல்லொழுக்கம் ஆகியவற்றின் வலிமையின் மூலம் மனிதர்களின் இதயங்களை வெல்வதே உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.

இதுவே உங்கள் பணி. இதுவே உங்கள் இலட்சியம். இதுவே உங்கள் உறுதிமொழி. எந்த ஒரு சாதனையும் முயற்சியும் கடின உழைப்பும் இல்லாமல் அடைய முடியாது என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

எனவே, நான் முன்பே கூறியதுபோல், ஒருபோதும் சோம்பேறித்தனத்திற்கு இடமளிக்காதீர்கள். மேலும், உங்கள் மார்க்க அறிவை தொடர்ந்து அதிகரிப்பதன் முக்கியத் -துவத்தை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நீங்கள் திருக்குர்ஆனைத் தொடர்ந்து படிக்க வேண்டும். அதேபோல், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நூல்களையும் முறையாக வாசிக்க வேண்டும். காலத்தின் கலீ. ்.பா அவர்களின் வெள்ளிக்கிழமை உரைகளை கவனமாகக் கேட்க வேண்டும். அவர்கள் வழங்கும் ஒவ்வொரு அறிவுரையையும் வழிகாட்டலையும் முழு கவனத்துடன் ஏற்று, அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும்.

தூய நபி (ஸல்) அவர்கள், "உண்மையான இறை நம்பிக்கையாளர் நுண்ணறிவும் ஞானமும் பெற்றவராவார்" என்று கூறியுள்ளார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதன் விளைவாக, இத்தகைய இறைநம்பிக்கையாளர்கள் தங்கள் மார்க்கத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் எந்தக் குற்றச்சாட்டையும் அல்லது எதிர்ப்பையும் மறுத்து விளக்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.

எனவே, அல்லாஹ்வுடனான உங்கள் தொடர்பை மேலும் ஆழப்படுத்துவதன் மூலமும், திருக்குர்ஆனைப் பற்றிய உங்கள் அறிவை அதிகரிப்பதன் மூலமும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் எழுத்துக்களை ஆராய்ந்து படிப்பதன் மூலமும், இந்த நுண்ணறிவை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்கள் மார்க்க அறிவும் நுண்ணறிவும் அதிகரிக்க அதிகரிக்க, நீங்கள் ஆன்மிகத்திலும் ஒழுக்கத்திலும் இயல்பாகவே முன்னேறுவீர்கள். அப்போது, எல்லையற்ற அருளாளனும் அன்புமிக்கவனுமான அல்லாஹ்வின் கருணைப் பார்வை உங்கள் மீது பொழியத் தொடங்கும். ஒருமுறை அல்லாஹ்வின் அன்பைப் பெறும் பாக்கியம் உங்களுக்கு கிடைத்து விட்டால், எந்த எதிரியும் உங்களுக்குத் தீங்கு செய்ய முடியாது. எந்தச் சோதனையும், எந்த எதிர்ப்பும், எந்த சக்தியும் உங்களை பலவீனப்படுத்தவோ, வழிதவறச் செய்யவோ, உங்களை வெல்லவோ முடியாது.

இந்த வார்த்தைகளுடன் நான் பிரார்த்தனை செய்கிறேன்: அல்லாஹ் நான் கூறிய இந்த அனைத்து அறிவுரைகளின்படியும் செயல்படும் நற்பேற்றை உங்களுக்கு வழங்குவானாக. இஸ்லாத்தின் போதனைகளின்படி உண்மையாக வாழ்பவர்களில் உங்களைச் சேர்ப்பானாக. இன்ஷா அல்லாஹ், எதிர்காலத்தில் நிச்சயமாக நிகழவிருக்கும் இஸ்லாத்தின் ஆன்மிக வெற்றியில், சிறப்பான பங்காற்றுவதன் மூலம் உங்கள் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை நீங்கள் நிறைவேற்றுபவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக.

இறுதியாக, இங்கு கலந்து கொண்டுள்ள இளம் சிறுமிகளுக்கு அவர்களுடைய கல்வி மற்றும் படிப்பின் முக்கியத்துவத்தை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற உறுதியுடன் இருக்க வேண்டும். உங்கள் கல்வி உங்களுடைய தனிப்பட்ட முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாமல், பிறருக்கும் ஜமாஅத்திற்கும் பயனளிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு நீங்கள் கல்வி கற்க வேண்டும். மேலும், சிறு வயதிலிருந்தே உங்கள் மார்க்க நம்பிக்கையில் உறுதியாக நிலைத்திருங்கள். உங்கள் மார்க்க நம்பிக்கைகளை எதிர்ப்பவர்களைக் கண்டு ஒருபோதும் அஞ்சவோ பயப்படவோ கூடாது.

இறுதியாக, வாக்கி.்.பாத்தே-நவ் உறுப்பினர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அல்லாஹ் தஆலாவை நோக்கியதாகவே அமைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். நீங்கள் அனைவரும் எப்போதும் அல்லாஹ்வை நினைவுகூர்பவர்களாகவும், அவனது நெருக்கத்தை நாடுபவர்களாகவும் ஆகுவீர்களாக.

அல்லாஹ் உங்களுக்கு எப்போதும் அவனுக்கு உண்மையுடனும் முழுமையான கீழ்ப்படிதலுடனும் வாழும் ஆற்றலை வழங்குவானாக. உங்கள் வாழ்நாள் முழுவதும், உங்கள் மார்க்கத்திற்குச் சிறப்பான முறையில் சேவை செய்வதாக நீங்கள் செய்துள்ள உறுதிமொழியை முழுமையாக நிறைவேற்றும் நற்பேற்றை அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக. ஆமீன்.

> **“வாக்கி.்.பாத்தே–நவ் உறுப்பினர்களாகிய நீங்கள் உங்கள் கல்வித் தகுதி எதுவாக இருந்தாலும், உங்கள் உண்மையான மதிப்பையும் ஆற்றலையும் ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். உங்கள் இல்லங்களில் மிக உயர்ந்த ஒழுக்க நெறிகளையும் நற்குணங்களையும் நீங்கள் வெளிப்படுத்தினால், அது உங்கள் பிள்ளைகளிடம் உயர்ந்த பண்புகளையும் உறுதியான ஈமானையும் உருவாக்குவதற்கான வழிமுறையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தப்லீக் பணிக்கான மிகவும் வலிமையான கருவியாகவும் அமையும். உங்கள் நற்குணம், நேர்மை, அடக்கம், உண்மையான பேச்சு ஆகியவை நல்ல மனப்பான்மை கொண்ட மக்களின் இதயங்களையும் சிந்தனைகளையும் உங்களிடம் ஈர்க்கும் ஒரு காந்தமாக அமையும். அதன் பின்னர், அவர்கள் நேர்வழியை அடைய வேண்டும் என்று நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது, அல்லாஹ் உங்கள் பிரார்த்தனைகளைச் செவிமடுத்து ஏற்றுக் கொள்வான்.”**

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam